விலை: 30.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

பேராதனை பல்கலைக்கழக
வெளிவாரி
புதிய ஆண்டிற்கான பதிவு விண்ணப்பங்கள் புதிய உயர் கல்லூரியினூடாக விண்ணப்பிக்க முடியும்.
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 8148
(C-8405)

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 17 செவ்வாய்க்கிழமை (03.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

## தாக்குதல் நடத்தப்படுமென முன்கூட்டியே அறிவிக்கப்பட்டது

### அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவில்லை; – ஜனாதிபதியிடம் விசாரணைக்குழு தலைவர்

(கொழும்பு)

தாக்குதல் ஒன்று நடத்தப்படுமென முன்கூட்டியே கிடைக்கப்பெற்ற தகவல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொள்ளவில்லை என உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் விசாரணை ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு 23

## சீனா, கனடா, பாகிஸ்தான் தூதுவர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு



(கொழும்பு)

சீனா, கனடா, பாகிஸ்தான் தூதுவர்களுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கினோன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். 23

### ஒரு மாத காலத்திற்கு

# பாராளுமன்றத்தை முடக்கினார் கோட்டா

### எந்த பிரேரணையோ, கேள்வியோ முன்வைக்க முடியாது கோப் குழு, தெரிவுக் குழுக்கள் கலைப்பு



(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஒத்திவைக்க ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நேற்று உத்தரவிட்டுள்ளார். அதன்படி இன்று நடைபெறவிருந்த அமர்வு 2020 ஜனவரி 3ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்காவில் யாழ்.இளைஞர்கள் இருவர் கைது

(கொழும்பு)

போலி விசாவை பயன்படுத்தி ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்ல முற்பட்ட யாழ்ப்பாணத்தை சேர்ந்த சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் 23

## யாழ்.நகரில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கடற்படை மற்றும் பொலிஸார் ஒருங்கிணைந்து யாழ்ப்பாண நகரப் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 4.210 கிலோ கேரள 23

## இரண்டு வாரத்தில் புதிய கட்சி

### சிறீகாந்தா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் இரண்டு வாரத்தில் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க உள்ளதாக சட்டத்தரணி சீறிகாந்தா தெரிவித்துள்ளார். யாழிலுள்ள தனது அலுவல 23

## 19ஆவது திருத்தச்சட்டத்தை ஒழிக்க ஒரு போதும் ஆதரவு வழங்கப்படமாட்டாது

### ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

19 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக மாற்றியமைப்பதற்கு ஒருபோதும் ஆதரவு வழங்கப்படமாட்டாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

19ஆவது திருத்தம் முன்னாள் அரசாங்கத்தால் தாக்கல் செய்யப்பட்டு இறுதியில் நிறை 23

## வவுனியாவில் விபத்து சம்பவ இடத்திலேயே இளைஞன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா புளியங்குளத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞரொருவர் சம்பவ இடத்தில் பலியாகியுள்ளார்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட் 23

## எதிர்க்கட்சித் தலைவராக கருவை நியமிக்க தீர்மானம்?



(கொழும்பு)

தற்போதைய சபாநாயகர் கரு ஜயசூரியவை எதிர்க்கட்சி தலைவராக நியமிப்பதென ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சர்ச்சைக்கு தீர்வு காண கூட்டப்பட்ட 23

## டெங்குக் காய்ச்சலால் இளம் குடும்பஸ்தர் யாழ்ப்பாணத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

டெங்குக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்த ரகுநாதன் லவன் (வயது 30) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த 23 ஆம் திகதி டெங்கு காய்ச்சல் காரணமாக 23

### 19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாகவே

## நியமனங்களை கிரமமாக வழங்க முடிந்தது - ராஜித

(கொழும்பு)

19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாகவே நியமனங்களை கிரமமான அடிப்படையில் வழங்க முடிந்தது என பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். நிறைவேற்று அதிகாரத்திற்கு தேவையானவகையில் நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது என்றார். (பு-3)

## வெள்ளைவானில் கடத்தப்பட்டு முதலைக்கு போட்ட விவகாரம்

### விசாரணைகள் ஆரம்பம்; நீதிமன்றில் சி.ஐ.டி

(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஏற்பாட்டில், வெள்ளை வாகனத்தில் கடத்தி முதலைக்கு போட்ட விவகாரத்தை வெளியிட்ட விவகாரம் தொடர்பாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் நேற்று தெரிவித்தனர்.

நவம்பர் 10ஆம் திகதி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் தகவல்களை இருவர் வெளியிட்டனர். 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா செல்ல தயாரானவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு

## வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் கடந்த வாரம் இரவு முச்சக்கரவண்டி - வான் விபத்தில் கனடா செல்ல புறப்பட தயாராகிய தகவலை உறவினருக்கு சொல்லிவிட்டு திரும்பி வந்த பெண்மணியே விபத்தில் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை 29ஆம் திகதி கிளிநொச்சியிலுள்ள உறவினர்களுக்கு கனடாவிற்கு செல்வதற்கு விசா கிடைத்து விட்டது. டிசம்பர் 2ஆம் திகதி கனடாவிற்கு செல்லவுள்ளதாக தகவல் தெரிவித்துவிட்டு வவுனியா குட்சைட் வீதியிலுள்ள வீட்டிற்கு தனது கணவருடன் முச்சக்கரவண்டியில் திரும்பிக் கொண்டிருந்தபோது இரவு ஓமந்தை - விளக்குவைத்தகுளம் பகுதியில் வீதியில் படுத்திருந்த மாடு ஒன்றுடன் எதிரே வந்த வான் ஒன்று மோதியதில் குறித்த வான் நிலை தடுமாறி வவுனியாவிற்கு சென்று கொண்டிருந்த முச்சக்கரவண்டியுடன் மோதியுள்ளது.

இதன்போது கனடாவிற்கு செல்லத் தயாராகிய இரமணிசுந்தர் இராஜசுலோசனா (வயது - 62) படுகாயமடைந்து உயிரிழந்துள்ளார். இவரது கணவர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-3,299)

**வேலையாள் தேவை**

உடுவிலில் இயங்கும் தொலைபேசி விற்பனை நிலையமொன்றுக்கு பெண் வேலையாள் தேவை. (C-8408)

தொடர்புக்கு

**077 125 9503**



**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆண், பெண் தேவை. (யாழ்ப்பாணத்தை அண்மித்து வசிப்பவர்கள் மட்டும்)

**தொடர்பு :- 0760973127**

# NOTICE

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**

**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

## WALK - IN - INTERVIEW

**POST OF PROJECT ASSISTANT (FULL TIME)** — **ON CONTRACT BASIS 02 VACANCIES**

**R2 - ELTA ELSE DEPARTMENT LEVEL DEVELOPMENT PROJECT - DEPARTMENT OF BIO SCIENCE, FACULTY OF APPLIED SCIENCE, VAVUNIYA CAMPUS AND DEPARTMENT OF ZOOLOGY - FACULTY OF SCIENCE, UNIVERSTIY OF JAFFNA.**

Walk in Interview for the above positions - On Contract Basis Will be held on 09.12.2019 From 9.00 AM to 12.00 noon, at the Mini Board Room, Administration Block of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared separate application for each post in the prescribed format available in the University website along with relevant original certificates on the date and the time mentioned above.

for further details please refer the Universtiy of Jaffna website **www.jfn.ac.lK.**

**Registrar** (C-8409)

# பொதுமக்கள் பார்வைக்கு

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கிணங்க வேலணை பிரதேச சபையின் 2020ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 03.12.2019ஆம் திகதி தொடக்கம் 12.12.2019ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்பதனை அறியத் தருகின்றேன்.

**02.12.2019** (C-8412) **தவிசாளர்**
**வேலணை பிரதேச சபை**

# மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2020ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மக்கள் பார்வைக்கு வைத்தல்

1985ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக 05.12.2019 - 20.12.2019 வரை பிரதேச சபையிலும் பிரதேச சபை பொது நூலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

**திரு.ம.தயானந்தன்**
**கௌரவ தவிசாளர்,**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை,**
**பாண்டியன்குளம்.** (C-8416)

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 - 06 - 1980



இறப்பு 01 - 12 - 2019

## முரளீதரன் நர்மதா

**(முகாமைத்துவ உதவியாளர் - பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல், வடக்கு மாகாணம், கைதடி)**

மணற்பகுதி, ஆவரங்கால் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முரளீதரன் நர்மதா (முகாமைத்துவ உதவியாளர்- பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - திட்டமிடல், வடக்கு மாகாணம், கைதடி) *01.12.2019*ஆம் திகதி இறைபதம் அடைந்தார்.

அன்னார் முரளீதரனின் (பொதுச் சுகாதார பரிசோதகர் - உப்புவெளி) அன்பு மனைவியும் அருந்தவம் - சந்திரவதனி தம்பதியினரின் அன்பு மகளும் பரஞ்சோதி - விமலாதேவி தம்பதியினரின் பாசமிகு மருமகளும், கீர்த்திகாவின் பாசமிகு சகோதரியும் பரஞ்சோதி (முன்னாள் மாகாணசபை உறுப்பினர் - வடக்கு மாகாணம்), பஞ்சமூர்த்தி (லண்டன்), பரமலிங்கம், பவானந்தன் ஆகியோரின் மருமகளும் சந்திரவிம்பம், சந்திரதேவி (சுவிஸ்), சந்திரலேகா ஆகியோரின் பெறாமகளும், தார்மீகன், கஸ்தூரி, பூங்கோதை, கோபிநாத், கோபிகீதன், காயத்திரி, சாதுரிகன், சதீஸ்குமார், சியாமி பிரியதர்சினி, சக்தீஸ்வரன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், பகீரதி, பரணீதரன், விமலரதி, கௌதமி, சுருதினி, எழிலினி, தாரகன், ஹரிஸ், பிறிஸ்ரிகா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று *(03.12.2019)* செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கிழக்கு கவுடுதா இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] புத்தூர். (C-8407) தகவல்:- குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 13.04.1933 — விண்ணில் 15.12.2018

## அமரர் கணபதிப்பிள்ளை சிவகுருநாதன்

(ஓய்வுநிலை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்னாள் பரிபாலன சபை தலைவர் –கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம்)

**திதி: 03.12.2019**

ஈராறு மாதங்கள் ஆனதென்ன
ஈரம் இன்னும் காயவில்லை.
என்றும் எம் குலதெய்வமாய்
எம்மோடு நீங்கள்...

குடும்பத்தினர்

பொன் கந்தையா வீதி, நெல்லியடி, கரவெட்டி (C-8424)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ‘சீ.சீ.ரி.வி.காட்சிகள், தொலைபேசி பதிவுகள், சாட்சிகள் ஒத்திருக்கவில்லை’

# விஸ்வரூபமெடுக்கும் கடத்தல் விவகாரம்

# இலங்கை அரசாங்கம் தீவிர கவனம்

## ❖ பாதுகாப்பு மற்றும் வெளியுறவு செயலாளர்கள் சுவிஸ் தூதுவரைச் சந்தித்து விளக்கமளிப்பு

## ❖ பாதிக்கப்பட்ட பணியாளரை மருத்துவ பரிசோதனைக்கு ஆஜர்படுத்த ஒத்துழைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தில் உள்நாட்டிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர் ஒருவர் தொடர்பாக கூறப்படும் குற்றச் சம்பவம் குறித்து இலங்கை அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி கடந்த 25 ஆம் திகதி அன்று இந்த விவகாரம் குறித்து உடனடியான முழுமையான விசாரணைக்கு உத்தரவிட்டது.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை வெளியுறவுத்துறைச் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்ஹ மற்றும் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) கமால் குணரத்ன மற்றும் தொடர்புடைய அதிகாரிகள், சுவிட்சர்லாந்தின் தூதுவர் ஹான்ஸ்பீற்றர் மொக் ஆகியோரையும் தூதுவராலயச் செயற்பாடுகளுக்கான பிரதித் தலைவரையும் சந்தித்து, பொலிஸ் திணைக்களத்தின் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் முடிவுகள் குறித்து விளக்கமளித்தனர்.

2019 நவம்பர் 29 வெள்ளிக்கிழமை சுவிட்சர்லாந்து தூதரகம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கூறப்படும் பாதிக்கப்பட்டவரை நேர்காணல் செய்யப்பட வேண்டியிருப்பதால் அவரை தம்மிடம் ஒப்படைக்குமாறு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற தூதரகம் நடவடிக்கை எடுக்காத போதும் விசாரணை நடத்தப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுபவரின் சார்பாக சுவிட்சர்லாந்து தூதரகம் முறையாக முன்வைத்தவாறு கூறப்படும் சம்பவத்தின் தொடர் நிகழ்வுகள் மற்றும் பாதிக்கப்பட்டவர் அந்தத் திகதியில் மேற்கொண்ட நடமாட்டங்களுடன் ஒத்திருக்கவில்லை என்பதை உபெர் பதிவுகள், சீ.சீ.ரி.வி. காட்சிகள், தொலைபேசி பதிவுகள் மற்றும் ஜி.பி.எஸ். தரவு உள்ளிட்ட சாட்சி நேர்காணல்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்களால் உறுதியாவது குறித்து தூதுவருக்கு தெளிவான சான்றுகள் வழங்கப்பட்டன.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் சுவிஸ் தூதரகத்துக்கு முன்வைத்த மறுக்க முடியாத ஆதாரங்களின் அடிப்படையில், இந்தக் குற்றச்சாட்டைச் சுற்றியுள்ள உண்மையான விடயங்களைக் கண்டறிய மேலதிக விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதற்காக பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் தூதரக ஊழியர் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளால் நேர்காணல் செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுபவர் தான் கடத்தப்பட்ட போது தனக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்திருப்பதால் அவர் இலங்கையில் உள்ள ஒரு நீதித்துறை மருத்துவ அதிகாரியால் மருத்துவ பரிசோதனைக்கு ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது.





இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் இந்தச் சம்பவம் தொடர்பான உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த இலங்கை அரசாங்கத்துடன் முழுமையாக ஒத்துழைக்குமாறு சுவிஸ் தூதரகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது என வெளியுறவு அமைச்சு விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# முஸ்லிம்கள் இல்லா அமைச்சரவை; சு.க. மீது பழிபோடுகிறார் பைசர்

## ❖ ஜனாதிபதியோ, பிரதமரோ காரணம் அல்ல

## ❖ இராஜாங்க அமைச்சர் பதவியை நிராகரித்தேன்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் நியமிக்கப்படாமைக்கு ஜனாதிபதியோ, பிரதமரோ காரணம் அல்ல என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே இந்தத் தவறுக்குக் காரணம் எனவும் முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தமது பங்காளிக் கட்சிகளுக்கு அமைச்சர் பதவிகளைப் பங்கிட்டுக் கொடுத்ததாகவும் இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குக் கிடைத்த அமைச்சர் பதவிகளுக்கு, முஸ்லிம் ஒருவரைக் கூட சிபாரிசு செய்யாதது, அந்தக் கட்சியின் தவறாகும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அங்கம் வகிக்கும் பொதுஜன பெரமுனவில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இல்லை என்பதனால் அந்தக் கட்சியிலிருந்து முஸ்லிம் அமைச்சர் ஒருவரை நியமிப்பதற்கான சாத்தியங்கள் இல்லை என்றும் பைஸர் முஸ்தபா சுட்டிக்காட்டினார்.

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்பட்ட அமைச்சுப் பதவிகளில் ஒன்றுக்கு, முஸ்லிம் ஒருவரை அந்தக் கட்சி சிபாரிசு செய்திருக்க வேண்டும். ஆனால், அதைச் செய்யவில்லை”

“இராஜாங்க அமைச்சர் பதவிக்காக எனது பெயரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிபாரிசு செய்த போதும் அதனை நான் நிராகரித்து விட்டேன்” என்று தெரிவித்த பைஸர் முஸ்தபா “கடந்த அரசாங்கத்தில் அமைச்சர் பதவியை வகித்த நான், இப்போது இராஜாங்க அமைச்சர் பதவியை எவ்வாறு வகிப்பது?” என்றும் கேள்வியெழுப்பினார்.



கோட்டாபய அரசாங்கத்தில் முஸ்லிம்கள் இடம் பெறாதது ஏன்?

“தனித்துவம் என்ற நிலைப்பாடு முஸ்லிம்களைத் தனிமைப்படுத்தி விட்டது”

“இராஜாங்க அமைச்சர் பதவிக்காக காதர் மஸ்தானின் பெயரை சிபாரிசு செய்யுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் கூறினேன். ஆனால், அதையும் அவர்கள் செய்யவில்லை. அந்த வகையில் இங்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான் பிழையாக நடந்துள்ளது”

“அரசாங்கத்தின் தீர்மானங்கள் அமைச்சரவையில்தான் எடுக்கப்படும் என்பதனால் அங்கு முஸ்லிம் ஒருவர் அமைச்சராக இருக்க வேண்டும். இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர் பதவிகளை முஸ்லிம்கள் வகிப்பதால் தமது சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. இராஜாங்க அமைச்சர்களுக்கு சம்பளமும் வாகனங்களும் வசதிகளும் தான் கிடைக்கும்” “எனவே, அமைச்சரவையில் முஸ்லிம் ஒருவர் இருக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும். ஆனாலும் அமைச்சர் பதவி கேட்டு யாருடனும் நான் பேசவில்லை” என்றும் அவர் கூறினார்.

“ஆனால், அமைச்சரவையில் முஸ்லிம்கள் இல்லை என்கிற குறையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான் தீர்த்து வைக்க வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்பட்ட அமைச்சர் பதவிகளுக்கு முஸ்லிம்களை சிபாரிசு செய்யுமாறு ஜனாதிபதியின் பொதுஜன பெரமுன கட்சி கூற முடியாது”

“அமைச்சரவையில் முஸ்லிம்கள் இல்லை என்பது சிக்கலான விடயம்தான். ஆனாலும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இந்தக் குறையைத் தீர்த்து வைக்கப் பார்ப்போம்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

### கடத்தப்பட்ட பணியாளரை வாக்குமூலம் வழங்கக்கோரி

# சுவிஸ் தூதரகம் முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டம்



(கொழும்பு)

கொழும்பில் அமைந்துள்ள சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றும் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் பெண் பணியாளரை வாக்குமூலம் வழங்கக்கோரி தாய் நாட்டுக்கான போர் வீரர்கள் அமைப்பின் தலைவர் ஓய்வு பெற்ற இராணுவ மேஜர் அஜித் பிரசன்ன உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நேற்றுக் காலை ஆரம்பித்தார்.

சுவிஸ் தூதரகத்திற்கு முன்பாக குறித்த உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை இன்னிங்ஸால் வீழ்த்தி

# தொடரை வென்றது அவுஸ்திரேலியா

அடிலெய்டில் நடந்த பகலிரவு டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 48 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டி20 மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றது. டி20 போட்டியை 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

இதையடுத்து, இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற முதல் பகல் இரவு டெஸ்ட் போட்டியிலும் பாகிஸ்தானை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 5 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

இந் நிலையில், இரு அணிகளும் மோதிய இரண்டாவது பகல் இரவு டெஸ்ட் போட்டி அடிலெய்டு மைதானத்தில் நடைபெற்றது. டாஸ் வென்ற அவுஸ்திரேலியா முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. இதையடுத்து, அந்த அணியில் தொடக்க வீரர்களாக டேவிட் வார்னர் மற்றும் ஜோ பர்ன்ஸ் களமிறங்கினர்.

ஜோ பர்ன்ஸ் 4 ரன்களில் ஆட்டமிழந்த நிலையில் மார்கஸ் லபுஸ்சேன் உடன் ஜோடி சேர்ந்த வார்னர் பாகிஸ்தான் பந்துவீச்சை துவம்சம் செய்தார். இரு வீரர்களும் சதம் விளாசினர். மார்கஸ் 162 ரன்களில் ஆட்டமிழந்தார். அதிரடியாக விளையாடிய டேவிட் வார்னர் முச்சதம் விளாசினார்.

அவுஸ்திரேலியா அணி 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 589 ரன்கள் எடுத்த நிலையில் முதல் இன்னிங்சை டிக்ளேர் செய்தது. வார்னர் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 335 ரன்களுடன் களத்தில் இருந்தார்.

இதையடுத்து, தனது முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் 302 ரன்களில் 'ஆல் அவுட்' ஆனது. இதனால் அந்த அணி 'பாலோ ஆன்' நிலையை சந்தித்தது. பாகிஸ்தான் அணியின் 8-வது வீரராக களமிறங்கிய பந்து வீச்சாளர் யாசிர்ஷா 113 ரன்களும், பாபர் ஆசம் 97 ரன்களும் எடுத்தனர். அவுஸ்திரேலியா தரப்பில் ஸ்டார்க் 6 விக்கெட்டுகளையும், பேட் கம்மின்ஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

387 ரன்கள் பின்தங்கிய நிலையில் தனது 2-வது இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் 3-வது ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 39 ரன்கள் என்ற மோசமான நிலையில் இருந்தது.

இந்நிலையில் டெஸ்ட் போட்டியின் 4-வது நாளான நேற்று, அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினர். இறுதியில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த பாகிஸ்தான் 239 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் பாகிஸ்தானை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 48 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது. அவுஸ்திரேலியா தரப்பில் அந்த அணியின் நாதன் லயன் அதிகபட்சமாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இரண்டு டெஸ்லிலும் சிறப்பாக விளையாடிய அவுஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர் டேவிட் வார்னருக்கு ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது.

### ஜோ ரூட் இரட்டைச்சதம் விளாசல்

## இங்கிலாந்து - நியூசிலாந்து மோதும் டெஸ்ட் ஆட்டம் சமநிலையாக வாய்ப்பு



நியூசிலாந்துக்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஜோ ரூட்டின் இரட்டைச் சதத்தால் இங்கிலாந்து அணி 476 ரன்கள் குவித்து ஆல் அவுட் ஆனது.

நியூசிலாந்து- இங்கிலாந்து அணிகள் மோதும் 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹேமில்டனில் நடைபெற்று வருகிறது.

நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 375 ரன் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய இங்கிலாந்து நேற்று முன்தினம் 3-வது நாள் ஆட்டத்தின் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 269 ரன் எடுத்து இருந்தது.

கேப்டன் ஜோரூட், தொடக்க வீரர் பர்னஸ் (101 ரன்) ஆகியோர் சதம் அடித்து இங்கிலாந்து அணியை நெருக்கடியில் இருந்து மீட்டனர்.

ஜோரூட் 114 ரன்னும், ஒலிபோப் 4 ரன்னும் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர். நேற்று 4-வது நாள் ஆட்டம் நடந்தது. 106 ரன்கள் பின்தங்கிய நிலை, கைவசம் 5 விக்கெட் என்ற கணக்கில் இங்கிலாந்து தொடர்ந்து ஆடியது.

ஜோரூட் தனது சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்து வெளிப்படுத்தினார். அவர் 335 பந்துகளில் 18 பவுண்டரியுடன் 150 ரன்னை தொட்டார். அவருக்கு போப் எல்லா வகையிலும் உதவியாக இருந்தார்.

இந்த ஜோடி நிதானமாக ஆடி 100 ரன்னை சேர்த்தது. மதிய உணவு இடைவேளையின் போது இங்கிலாந்து அணி 375 ரன்னை தாண்டி முன்னிலை பெற்றது. போப் 167 பந்தில் 4 பவுண்டரியுடன் 50 ரன்னை எடுத்தார். 4-வது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது முதல் அரைச்சதமாகும்.

மறுமுனையில் இருந்த ஜோரூட் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி இரட்டை சதம் அடித்தார். 412 பந்துகளில் 200 ரன்னை எடுத்தார். இதில் 22 பவுண்டரிகள் அடங்கும். 88-வது டெஸ்டில் விளையாடும் ஜோரூட்டுக்கு 3-வது இரட்டைச் சதம் இதுவாகும். இதற்கு முன்பு 2014-ல் இலங்கைக்கு எதிராக லார்ட்ஸ் டெஸ்டில் 200 ரன்னும் (அவுட்இல்லை), 2016-ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான மான்செஸ்டர் டெஸ்டில் 254 ரன்னும் எடுத்து இருந்தார்.

இந்த ஜோடியை வாங்கர் பிரித்தார். போப் 75 ரன்னில் ஆட்டம் இழந்தார். அப்போது ஸ்கோர் 455 ஆக இருந்தது. 6-வது விக்கெட் ஜோடி 193 ரன் எடுத்தது முக்கியமானது. அதை தொடர்ந்து கேப்டன் ஜோரூட்டும் வெளியேறினார். அவர் 441 பந்துகளில் 22 பவுண்டரி, 1 சிக்சருடன் 226 ரன்கள் குவித்தார்.

இங்கிலாந்து அணி 162.5 ஓவரில் 476 ரன் குவித்து 'ஆல்அவுட்' ஆனது. இது நியூசிலாந்து அணியின் ஸ்கோரைவிட 101 ரன் கூடுதலாகும். வாக்னர் 5 விக்கெட்டும், சவுத்தி 2 விக்கெட்டும் எடுத்தனர்.

101 ரன்கள் பின்தங்கிய நிலையில் நியூசிலாந்து 2-வது இன்னிங்சை ஆடியது. நேற்றைய ஆட்ட நேர முடிவில் நியூசிலாந்து அணி 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 96 ஓட்டங்களை பெற்றிருந்தது.

## ஆஸியுடன் தொடர்ந்து 14 போட்டிகளில் தோல்வியடைந்து பாகிஸ்தான் பரிதாபம்



அவுஸ்திரேலியா மண்ணில் தொடர்ந்து 14 டெஸ்ட் போட்டிகளில் தோல்வியடைந்து பாகிஸ்தான் அணி மோசமான சாதனையை பதிவு செய்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடியது. இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், இரண்டு டெஸ்டிலும் இன்னிங்ஸ் தோல்வியையே தழுவியது.

பாகிஸ்தான் அணி கடந்த 1999-ம் ஆண்டில் இருந்து தற்போது வரை அவுஸ்திரேலியா மண்ணில் ஒரு வெற்றி அல்லது டிரா கூட பெற முடியாத நிலையை அடைந்துள்ளது. இதுவரை 14 போட்டிகளில் தொடர் தோல்வியை சந்தித்துள்ளது.

வெளிநாட்டு மண்ணில் ஒரு அணி தொடர்ந்து 14 போட்டிகளில் தோல்வியடைந்த ஒரே அணி என்ற மோசமான சாதனையை பதிவு செய்துள்ளது. அத்துடன் தொடர்ந்து ஐந்து தொடர்களிலும் வைட் வாஷ் ஆகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களின் எதிர்காலத்தை

# தமிழரசுக் கூட்டிலிருந்து தீர்மானிக்க முடியாது

# ரெலோ வெளியேறினால் மீண்டும் இணைவேன்

## சிவாஜிலிங்கம் நிபந்தனை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு இடைக் காலத் தீர்வைக் கூடப் பெற்றுத்தர முடியாத தமிழரசுக் கட்சிக் கூட்டிலிருந்து ரெலோ வெளியேறுமானால் மீண்டும் அக்கட்சியில் இணைவது பற்றிப் பரிசீலிப்பேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

எதிர்கால அரசியல் நிலைப்பாடு பற்றி வலம்புரிப் பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல தமிழ்க் கட்சிகள் அங்கம் வகிக்கும் நிலையில் அங்கத்துவக் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் தனித்து முடிவுகளை எடுக்கும் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளை ஆதரிக்க நான் தயாராக இல்லை.

நல்லாட்சி அரசாங்கத்தில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்ற விசாரணைகளை ஐ.நா. துரிதப்படுத்த வேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ளவர்களும் சிவில் சமூகத்தினரும் விரும்பிய நிலையில் தமிழரசுக் கட்சியின் தன் ஆதிக்கச் செயற்பாட்டால் இரண்டு வருட கால நீடிப்பு வழங்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்ததில் தமிழ் மக்களுக்கு பாரிய பங்குண்டு. அந்நிலையில் அந்த அரசாங்கத்துக்கு 3 தடவைகளுக்கு மேல் ஆட்சிக் கவிழ்ப்புச் சந்தர்ப்பத்தில் தமிழ்க் கூட்டமைப்பினர் ஆதரவும் வழங்கினார்கள்.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி இடைக்காலத்தீர்வு ஒன்றைக்கூட பெற எத்தணிக்காத தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவிட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல பங்காளிக் கட்சிகள் இருந்த போதும் தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களின் அடிப்படையில் செயற்படும் கருவிகளாக ஏனைய கட்சித் தலைவர்கள் காணப்படுகின்றமை எமது மக்



களின் அபிலாசைகளைக் கிடப்பில் போடுவதாக அமைகிறது. தற்போதைய கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தமாட்டோம் எனச் சொல்லும் நிலையில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் வடக்குக் கிழக்கு இணைப்பைக் கூட தமிழ்த் தலைமைகள் தவறவிட்டு விட்டனர்.

வடக்குக் கிழக்கை பிரித்து தீர்ப்பளித்த அப்போதைய இலங்கையின் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்த சரத் என் சில்வா தனது தீர்ப்பில் வடக்குக்கிழக்கு இணைய வேண்டுமென்றால் சாதாரண பெரும்பான்மையுடன் தீர்மானத்தை நிறைவேற்றலாம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

எனவே தான் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் தமிழரசுக் கட்சிக் கூட்டிலிருந்து தீர்மானிப்பது தமிழ் மக்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் எனக் கருதுவதாகவும் தமிழரசுக் கட்சிக் கூட்டிலிருந்து ரெலோ வெளியேறுமானால் மீண்டும் கட்சியில் இணைவது பற்றிப் பரிசீலிப்பேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## அனர்த்த நிலைமைகளின் போது

# மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யவும் அரச அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

சீரற்ற வானிலை காரணமாக தற்போது நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு, மண்சரிவு உள்ளிட்ட அனர்த்த நிலைமைகளின்போது பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் அவர்களின் நலன்புரி தேவைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தாமதமின்றி மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியால் அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

நிலவும் அதிக மழைவீழ்ச்சி காரணமாக ஏற்படக்கூடிய மண்சரிவு, மண்மேடுகள் சரிந்து விழுதல், கற்பாறைகள் சரிந்து விழுதல் போன்ற அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியன ஒன்றிணைந்து அனர்த்த நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தேவையான சூழலை ஏற்படுத்தவும் பொது மக்களுக்கான நலன்புரி தேவைகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு சுற்றுநிருபத்தின் ஊடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வனைத்து செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு மற்றும் மீளாய்வு ஆகியன பிரதமரின் தலைமையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலகம் மேலும் அறிவித்துள்ளது. (இ-7)

# மட்டக்களப்பில் அடைமழை; 1050 குடும்பங்கள் இடம்பெயர்வு





(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வருகின்ற அடைமழையால் 1050 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

மண்முனை வடக்கு, காத்தான்குடி, ஆரையம்பதி, கிரான், வாழைச்சேனை, வெல்லாவெளி ஆகிய பிரதேசங்களில் வசிக்கின்ற 1050 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 765 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை தற்காலிக முகாம்களில் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த நிலையப் பணிப்பாளர் எ.எம்.எஸ் சியாத் தெரிவித்தார். (இ)

# பரு. நகரசபை பட்ஜெட் தோல்வி

## எதிராக எட்டு; ஆதரவாக ஏழு பேர் வாக்களிப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை நகர சபையின் பட்ஜெட் ஒரு வாக்கால் தோற்கடிக்கப்பட்டது. பருத்தித்துறை நகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நகரசபை மண்டபத்தில் தவிசாளர் யோ.இருதயராஜா தலைமையில் இடம்பெற்றது. சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டில் சில விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என சபை உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து முற்பகல் 10 மணி அளவில் சபை ஒத்தி வைக்கப்பட்டு திருத்தப்பட்ட பட்ஜெட் கொண்டு வரப்பட்டது. இதில் திருத்தப்பட்ட பட்ஜெட்



வாக்கெடுப்புக்கு விடப்பட்ட நிலையில் பட்ஜெட்டிற்கு எதிராக 8 வாக்குகளும் ஆதரவாக 7 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஒரு மேலதிக வாக்கால் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டது. (இ-5-60)

# கனகேஸ்வரனுக்கு கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் (வரையறுக்கப்பட்டது) ஏற்பாட்டில், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலராக கடமையாற்றி, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்ற க.கனனேஸ்வரனை கௌரவிக்கும் நிகழ்வு இன்று 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் கோண்டாவில் கிழக்கு சங்கக் காரியாலயத்தில் யாழ்.மாவட்ட பா.ஊ.உ.கூ. சங்கத் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளும் பலன்களும்

## கனவுகளில் ஐம்பூதங்கள் — வானம்

கருமேகங்கள் படராத தெளிவான வானத்தைக் கனவில் கண்டால் நல்ல புகழும், கீர்த்தியும் உண்டாகும். ஜென்ம விரோதிகளும் நண்பர்களாவர். காரியம் வெற்றியாகும். வியாபாரத்தில் இலாபம் கிடைக்கும். வழக்குகளில் வெற்றி கிடைக்கும்.

கருமேகங்கள் படர்ந்த வானத்தைக் கனவில் கண்டால் மேலே சொன்ன பலன்களுக்கு நேர்மாறான பலன்கள் நடக்கும்.. கஷ்டங்களும் கவலைகளும் ஏற்படும். கெட்ட பெயர் உண்டாகும்.

வெண்மேகமும், கருமேகமும் கலந்த வானத்தைக் கனவில் கண்டால் கஷ்டங்கள் விரைவில் விலகும். சிவந்த வானத்தைக் கனவில் கண்டால் குடும்பத்தில் யாருக்காவது நோய் ஏற்படலாம். வியாபாரிகள் இந்தக் கனவைக் கண்டால் நஷ்டம் ஏற்படும்.

திருமண ஏற்பாடு நடந்து கொண்டிருக்கும் போது இந்தக் கனவைக் கண்டால் விரைவில் திருமணம் நடக்கும். இடி இடிப்பது போலவும் அதிலிருந்து தப்புவது போலவும் கனவு கண்டால் துன்பம் வந்து விலகும்.

இடியும், மின்னலும் கனவில் தோன்றினால் விவசாயம் மேன்மை அடையும். தொழிலும் வெற்றி அடையும்.

பலவித நோய்களால் துன்பப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் சூரியனை கனவில் கண்டால் விரைவில் குணம் அடைவார்கள். எதிர்ப்புகளை வெல்வார்கள்.

பெண்கள் கனவில் சூரியனைக் கண்டால் புத்திர பாக்கியம் உண்டாகும். சூரிய கிரகணத்தைக் கனவில் கண்டால் குற்றங்கள் விலகும். அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும்.

நட்சத்திரங்களைக் கனவில் கண்டால் செய்யும் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். நட்சத்திரங்கள் உதிர்வதாகக் கனவு கண்டால் நட்டம் உண்டாகும். பூரண சந்திரனைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் உயர்வு ஏற்படும். வசதி உண்டாகும்.

சந்திரனில் முகம் ஒன்று இருப்பது போலக் கனவு கண்டால் புத்திரபாக்கியம் உண்டாகும். சந்திரனை மேகங்கள் மூடியிருப்பது போலக் கனவு கண்டால் வாழ்வில் இருள் சூழும். மேகங்கள் விலகுவதாகக் கனவு கண்டால் துன்பங்கள் வந்து நீங்கும்.

கனவில் வால் நட்சத்திரத்தைக் கண்டால் நமக்கு வேண்டிய அதிக செல்வாக்குள்ள நண்பர் அல்லது உயர்பதவியில் இருப்பவரின் உடல்நலம் பாதிக்கப்படும். வானத்தில் பறப்பது போலக் கனவு கண் டால் வாழ்வில் எதிர்பாராத ஏற்றங்கள் ஏற்படும்.

# சூழல் நேயம் மிக்க கடதாசி சார் அலங்காரப் பொருட்கள் தயாரித்தல்

(யாழ்ப்பாணம்)

சூழல் நேயம் மிக்க சுயதொழில் முயற்சிகளை உருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தால் கடதாசிசார் அலங்காரப் பொருட்கள் தயாரித்தல் பயிற்சிநெறி எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஐந்து நாட்களுக்கு தம்பசிட்டி சதாவதானி வாசிகசாலைக்கு அண்மையிலுள்ள மாலந்தனி ஆலயத்திற்கு அருகிலுள்ள பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் (பண்டாரி அம்மன் வீதியிலுள்ளது) இடம்பெறவுள்ளது.

இதில் வாழ்த்து மடல், பரிசுப் பொருட்கள், வைபவங்களுக்கான அலங்கார வேலைகள், Wall hangers ஆகியன தயாரித்தல் உட்பட பல விடயங்களை உள்ளடக்கியதாக இப்பயிற்சி நெறி அமையவுள்ளது.

எனவே இப் பயிற்சி நெறி செயலமர்வுகளில் பங்குபற்ற விரும்புபவர்களையும் ரெஜிபோம் மற்றும் பிளாஸ்ரிக் சார் அலங்கார வேலையில் ஈடுபடுவோரையும் வைபவங்களுக்கான அலங்கார வேலைகளில் ஈடுபடுவோரையும் மேற்படி செயலமர்வில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக்கொண்டுள்ளார்.

பயிற்சிகள் காலை 9 மணியளவில் ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# நல்லூரிலிருந்து கதிர்காமம் வரை புனித திருத்தல தரிசன யாத்திரை

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதலுதவிச் சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் ஏற்பாட்டில் நாட்டில் சாந்தி, சமாதானம், நல்லிணக்கம் நிலவ வேண்டி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து, கதிர்காமம் கந்தன் ஆலயம் நோக்கிய புனித திருத்தல யாத்திரை இன்று 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகும்.

யாத்திரை மேற்கொள்வோர் கைதடிப் பிள்ளையார், கிளிநொச்சி செல்வநகர் கந்தன் குளம் ஓம் சக்தி வேல்கோவில், முறிகண்டிப் பிள்ளையார், வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளி அம்மன், தோணிக்கல் ஆஞ்சநேயர் ஆலயம், சிதம்பரபுரம் பழனிமுருகன் ஆலயம், திருகோணமலை லக்ஷ்மி நாராயணன் ஆலயம், சல்லி அம்மன், மட்டக்களப்பு திரௌபதி அம்மன் ஆலயம், கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரார் ஆலயம், தாந்தா மலை முருகன் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம் ஆகிய ஆலயங்கள் தரிசித்து கதிர்காமம் கந்தன் ஆலயத்தை சென்றடைவர். (இ-5)

# கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 55 ஆவது நினைவுதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பெரியார் வி.வீரசிங்கத்தின் 55ஆவது நினைவு தின நிகழ்வு நாளை மறுதினம் 5 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கித் (NCDB) தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர், யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி ச.சியாமளா, மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் கே.கோடீஸ்வரன், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவதரன், ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி. த.செந்தினி ஆகியோர் கலந்து கொள்வர்.(இ-5)

# ஆடை வங்கித் திட்டம்



(யாழ்ப்பாணம்)

Joy Makers குழுவினரின் ஆடை வங்கி திட்டத்தின் முதல் நிகழ்வானது கடந்த 30ஆம் திகதி உரும்பிராய் செல்வபுரத்தில் இடம்பெற்றது. ஆடைவங்கியின் இலவச கடையில் தெரிவு செய்யப்பட்ட 15 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் தங்களுக்கான ஆடைகளை இலவசமாக கொள்வனவு செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மனித உரிமைகள் நிலைய இணைப்பாளர் அருட்தந்தை டிக்ஷன், உரும்பிராய் தெற்கு கிராம உத்தியோகத்தர், கோப்பாய் பிரதேச பொலிஸ் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-5-9)

# இராசி பலன்

**மீனம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்த சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் சற்றுக்கூடும்.

**மேடம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள்.

**இடபம்:** தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மிதுனம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பார்கள்.

**கும்பம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது. வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களைவிட்டு விலகலாம்.

**மகரம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** தெய்வ அனுகூலத்தால் சிறப்புகள் வந்து சேரலாம், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் இடம்பெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**துலாம்:** வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

கிரகநிலை: ராகு; சந்; சனி, சுக்கிரன், கேது; சூரி; செவ், புத

சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்

03.12.2019

கார்த்திகை 17, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

சப்தமி பின்னிரவு 12.36 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 4.09 மணிவரை

சுபநேரம் 10.45-12.15 மணிவரை

இராகுகாலம் 3.15-4.45 மணிவரை

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல்-2020

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் "முதலாவது அட்டவணை" என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும். ஏற்கனவே 2019 ஆம் ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு "இரண்டாவது அட்டவணை" என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுக் காலம் 01.12.2019 தொடக்கம் 31.12.2019 பிற்பகல் 5.00 மணி வரையாகும். கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2020"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதவான், இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 321 3024/ 021 320 7785 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

**செயலாளர், நா.யோகநாதன், அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

**முதலாவது அட்டவனை -(படிவம்01)**

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்
### ........ஆம் ஆண்டு

1.விண்ணப்பதாரரின் முழுப்பெயர்:-.......................... 2.பிறந்தநாள்:- ..........................

3.இந்து சமயத்தவரா?:........................ 4.நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா? :-....................

5.நீங்கள் உறுப்புரிமை 03(2)(ஏ) அல்லது 03(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின், இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6.இலங்கை முகவரி:..................

7.விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற் கட்டளையின் விபரம்:-

| காசுக்கட்டளை/த.க. இல | அலுவலகமும் வழங்கிய நாளும் | தொகை |
|---|---|---|
| .............................. | ........................................ | .............................. |

8.நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.

9.இந்தக் கோவிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?

10.இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு, வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

....................................
**விண்ணப்பதாரர் ஒப்பந்தம்**

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில்............ ஆம் ஆண்டு ...................... மாதம் .................... நாளன்று.................. என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

**என் முன்னிலையில்**

....................................
**உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்**

**குறிப்பு:-** விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
20......:..............12,31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**இரண்டாம் அட்டவணை - (படிவம் 02)**

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்
### ........ஆம் ஆண்டு

செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு,
அன்பார்ந்த ஐயா,
வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்

............... ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.
............... அஞ்சலகத்தால் .............. ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட .................... இலக்கங்கொண்ட காசுக் கட்டளை/தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன்.
வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர்:-.............................. முகவரி:-.............................

எனக்குள்ள உபயம்:-...................... உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம்:-..................................

(C-8406)

..........................
**உறுப்பினர் ஒப்பம்**

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில்......................... ஆம் ஆண்டு ............... மாதம்................. நாளன்று ......................... என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

**என் முன்னிலையில்**

....................................
**உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்**

**குறிப்பு:-** விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்துமத குரு, இலங்கை நிர்வ்ரக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
20..........12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

# யாழ்.சின்மயா மிஷனில் பகவத்கீதை ஜெயந்தி விழா

(யாழ்ப்பாமணம்)

மகா பாரதத்தில் குருஷேத்திரத்தில் போரிட மறுத்து நின்ற பார்த்தனுக்கு தேர்ப்பாகனாக நின்ற பகவான் கிருஷ்ணர் "பகவத்கீதை"யை உபதேசித்து அவனது கலக்கத்தை போக்கிய நாள் பகவத்கீதை ஜெயந்தி தினம் என வருடந்தோறும் ஆராதிக்கப்பட்டு வருகின்றது.

சின்மயா மிஷனின் ஸ்தாபகராகிய சுவாமி சின்மயானந்தருக்கு ஆன்மீக ஞானத்தை வழங்கிய சுவாமி தபோவன் மகராஜ் அவதரித்த தினம் "தபோவன ஜெயந்தி" என வருடம்தோறும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இவ் இரு புனித தினங்களும் ஒரே நாளில் அதாவது டிசெம்பர் மாத பூர்வ பட்ச ஏகாதசி திதியில் வருவது சிறப்பம்சமாகும்.

எனவே எதிர்வரும் 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் இரு ஜெயந்திதின ஆராதனைகளும் பஜனை, பூஜை, அஷ்டோத்தர நாம அர்ச்சனை, சத்சங்கம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (இ-5-7)

# இலவச மருத்துவ சேவை இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கமும், கோப்பாய் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ சேவைகள் இன்று 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறும். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிலிருந்து வெளியேறும் நிலையில் கடத்தப்பட்ட சுவிஸ் தூதரகப்பெண்

## முன்னாள் அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**சுவிஸ் தூதரகப்பெண் ஊழியர், குடும்பத்தாருடன் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.**



சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடத்தலுக்குள்ளான இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகப்பெண் ஊழியர், தற்போது பேசுவதற்குக் கூட முடியாத வகையில் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றார்.

அத்துடன் அவர், குடும்பத்தினருடன் கூட சரியாக பேச முடியாத நிலையில் காணப்படுகின்ற போது, அவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுவதில் எந்த நியாயமுமில்லை.

மேலும் கடத்தலுக்கு உள்ளான குறித்த பெண் உள்ளிட்ட அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறி சுவிட்சர்லாந்துக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை எங்களது 5 வருட ஆட்சிக் காலத்தில் எவரும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கூறி நாட்டை விட்டு வெளியேறியது கிடையாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நஞ்சற்ற உணவின் நன்மைகளும் நஞ்சு உணவின் பாதிப்புக்களும் எனும் தலைப்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை மருதனார்மடம் விவசாயக் கல்லூரி மண்டபத்தில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் என்.இன்பம் தலைமையில் நடைபெற்றது. இதில் வளவாளராக மருதனார்மடம் விவசாயக் கல்லூரி போதனாசிரியர் எஸ்.கந்தசாமி கலந்து கொண்டார்.

# 19 ஆவது திருத்தச்சட்டம் குறித்து கலந்துரையாடத் தயார் - ஹக்கீம்

(கொழும்பு)

19 ஆவது திருத்தச் சட்டத்தில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமாயின் அது தொடர்பாக கலந் துரையாடத் தயார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்தது.

இதேவேளை நிறைவேற்று அதிகாரத்திற்கும் அரசியல் யாப்புக்கும் இடையில் ஒரு சமநிலை தன்மை பேணப்படுவது சிறந்தது என அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



19 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்ய அரசாங்கத் தரப்பு முனைப்புக்காட்டி வருவது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

19 ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளதால், அதனை இரத்துச் செய்ய வேண்டுமென புதிய அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

அத்தோடு, ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டதால் ஆட்சி செய்வது கடினமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் யாழில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது தெரிவித்தார்.

இந்நிலையில் 19 ஆவது திருத்தச் சட்டம் குறித்து கலந்துரையாடுவதற்குத் தயார் என ஹக்கீம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பருத்தித்துறை நகரசபை பட்ஜெட்டில்

# திருத்தங்களை மேற்கொள்ள அனுமதித்தபோதும் வாக்கெடுப்பைக்கோரியமை நாகரிகமற்ற செயல்

## தவிசாளர் இருதயராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் திருத்தங்களை மேற்கொள்ள உறுப்பினர்களுக்'கு சந்தர்ப்பம் வழங்கியும் வாக்கெடுப்பைக் கோரியமை நாகரிகமற்ற செயல் என பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் யோ. இருதயராசா தெரிவித்தார்.

பருத்தித்துறை நகரசபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நேற்று நடைபெற்ற விசேட சபைக்கூட்டத்தில் தவிசாளர் யோ.இருதயராசாவால் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த தவிசாளர் இவ் வரவு- செலவுத்திட்டத்தின் வரைபானது 2019.11.14ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தில் சகல உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டதோடு அதன் பிரதிகளை நகர சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், பொதுநூலகம்,அலுவலகத்திலும் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக காட்சிப்படுத்துவதென 2019.11.29ஆம் திகதிவரை காட்சிப்படுத்தப்பட்டது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு உறுப்பி[illegible]ளின் வேலைத்திட்டங்களுக்கென ரூபா ஒரு மில்லியன் ஒதுக்கப்பட்டது. உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட தேவைகள் அனைத்தையும் இந்த ஒரு மில்லியன் ரூபாவிலிருந்து நிறைவேற்ற முடியாமையால் மத்திய, மாகாண அரசிடமிருந்து மூலதன நன்கொடையாக கிடைக்கப்பெறும் நிதிகளிலிருந்து நிறைவேற்றுவதற்காக வேலைத் திட்டங்களுக்கு அடையாள ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்ச்சித்திட்ட வாரியாக சகல [illegible] ங்களின் [illegible] குழுக் கூட்டத்திலும் சபைக் கூட்டத்திலும் பரிந்துரைக்கப்பட்டே வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டது.

தவிசாளர் தனது கொள்கை விளக்கவுரையினை ஆற்றியதன் பின்னர் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் கருத்துத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன்போது ஒவ்வொரு உறுப்பினர்களாலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு அதில் 2020 வரவு-செலவுத்திட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை உள்ளடக்கிய வரவு-செலவுத்திட்டத்தை இன்றைய தினம் (நேற்று) நிறைவேற்றுவது தொடர்பில் உறுப்பினர்களின் அபிப்பிராயங்கள் கோரப்பட்டு திருத்தங்களுடனான வரவு-செல்வுத்திட்டத்தை இன்றைய தினம் (நேற்று) நிறைவேற்றுவதற்கு பகிரங்க வாக்கெடுப்புக்கு விடுமாறு 8 உறுப்பினர்கள் கோரியதன் அடிப்படையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன்போது திருத்தங்களுடனான வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, சமத்துவத்திற்கும் நீதிக்குமான அமைப்பு (சுயேட்சைக்குழு) சேர்ந்த 7 உறுப்பினர்களும் எதிராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இருவருடன் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 6 உறுப்பினர்களுமாக 8 உறுப்பினர்கள் வாக்களித்தனர். இவ்வரவு-செலவுத்திட்டம் ஒரு வாக்கால் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து இவ்வரவு- செலவுத் திட்டத்தை 14 நாட்களுக்குள் மீள சபையினுடைய அனுமதிக்காக சமர்ப்பிக்கவுள்ளதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார். (இ-10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்தரத் தீர்விற்கான தலையீட்டை இந்தியா மேற்கொள்ள வேண்டும்

## அதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளைப்பூர்த்தி செய்யும் வகையில் இணைந்த வடக்கு-கிழக்கில் சுய நிர்ணய அடிப்படையிலான சமஷ்டி தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இந்தியா விரைவாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே எமது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்று தெரிவித்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப்போதிய அதிகாரத்தை வழங்கும் வகையில் 13 ஆவது திருத்தச் சட்டம் நாட்டில் காணப்படாமையால் இயன்றளவு விரைவாக நிலையான தீர்வு ஒன்றை கொண்டு வருவதற்கான தலையீட்டை இன்னும் இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்பதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டினார்.**



**கேள்வி:** பாரதப் பிரதமர் 13 ஆவது திருத்தச் சட்டத்தை வலியுறுத்தியிருக்கிறார். 13 ஆவது திருத்தச் சட்டம் இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளுக்கு ஒரு தீர்வாகுமா?

**பதில்:** இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இந்திய பிரதமர் கேட்டிருப்பது தமிழ் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருக்கின்றது என்பது உண்மையே. ஆனால், இலங்கை இனப்பிரச்சினைக்கு நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் தமிழ் மக்களின் நீண்டகால அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் இணைந்த வடக்கு, கிழக்கில் சுய நிர்ணய அடிப்படையிலான சமஷ்டி தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இந்தியா விரைவாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே எமது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. வெளிநாட்டு, உள்நாட்டு சட்ட நிபுணர்கள் சேர்ந்து இலங்கை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஒரு நிரந்தர அரசியல் யாப்பை வெகுவிரைவில் தயாரிக்க வேண்டுமென்பதே எம் மக்களின் பரந்துபட்ட எதிர்பார்ப்பு.

ஆனால் இன்று இலங்கை அரசியலமைப்பின் ஒரு பகுதியாக காணப்படும் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. தற்போதைக்கு இது முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும். அத்துடன் அதன் நடைமுறைப்படுத்தலுக்கு பாதகமாக அமைந்திருக்கும் 1992 ஆம் ஆண்டின் 58ஆம் இலக்கச் சட்டம் போன்றவை உடனே கைவாங்கப்பட வேண்டியது கட்டாயமாகின்றன.

மேலும் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட வேண்டும். தரப்பட்டிருக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் காணி,பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால் இவை தந்தால்கூட 13 ஆவது திருத்த சட்டம் எந்த அடிப்படையிலும் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைகளை மற்றும் உடனடியான பிரச்சினைகளைக் கூட தீர்க்க மாட்டாது. எனவே தீர்ப்பதற்குப் போதிய அதிகாரத்தை வழங்கும் வகையில் 13 ஆவது திருத்தச் சட்டம் காணப்படாமையினால் இயன்றளவு விரைவாக நிலையான தீர்வு ஒன்றை கொண்டு வருவதற்கான தலையீட்டை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்பதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

நாம் ஒற்றையாட்சிக்குள் தெற்கில் இருக்கும் பெரும்பான்மை மக்களின் கைப் பொம்மையாக 13 ஆம் திருத்தச் சட்டத்தினால் மாற்றப்பட்டிருப்பதை யாவரும் உணர வேண்டும். ஆனால் வட கிழக்கில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையானவர்கள் என்பதையும் யாவரும் தெரிந்து கொள்ள வேண்டும். எமது நிலங்கள், மொழி, கலாசாரம், வாழ்வுமுறை, பாரம்பரியம், மதத் தலங்கள் யாவும் பெரும்பான்மை மக்கள் ஒற்றையாட்சியின் கீழ் பெற்றுக் கொண்டுள்ள அதிகாரங்களால் இன்று பாதிக்கப்பட்டு வருகின்றன. எமது தனித்துவம் வெகுவிரைவில் மறையும் நிலைமை எம்மை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதை நாம் உணர வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் முன்னெப்போதையும் விட மோசமான அடக்குமுறைக்குள் அகப்பட்டுள்ளனர். அவர்களின் இருப்பும் அடையாளமும் முற்றாக அழிந்து போகும் ஆபத்துக்குள் அவர்கள் தற்போது இருந்து வருவதை இந்தியா உணர வேண்டும். இந்தியாவே எமது பாதுகாப்பு அரணாக தற்போது இருக்கின்றது. தமது இன்னல்கள் துன்பங்களுக்கு முடிவு கட்டி எமது வரலாற்றுக்கால கீர்த்தியையும் பெருமையையும் நாம் நிலைநாட்டும் வகையில் இந்தியா காத்திரமான ஒரு தலையீட்டைச் செய்யும் என்று எமது மக்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றார்கள். இந்தியப் பிரதமர் 2015 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்து பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் கூட்டு சமஷ்டி அடிப்படையிலான ஒரு ஆட்சிமுறை குறித்து பிரஸ்தாபித்திருந்தமை தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை அளித்திருந்தது.

அதனை இத்தருணத்தில் இந்தியத் தலைவர்களுக்கு நினைப்பூட்ட வேண்டிய கட்டாயம் எமக்கு உள்ளது. முக்கியமாக இதனை இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கருக்கு நினைவூட்ட வேண்டியுள்ளது. அவர் இங்கு பதவிகள் வகித்தவர். எமது நிறை குறைகளை அறிந்தவர். 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் என்பது ஒருகையினால் சிறிதளவு அதிகாரத்தைக் கொடுத்து மறுகையினால் அதனை எடுத்துக் கொள்ளும் ஒரு சட்டக்கோவையாகவே [illegible] வடமாகாணத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில் நான் தெளிவாகவே புரிந்து கொண்டிருந்தேன்.

தமிழ் பேசும் மக்களின் நீண்டகால நியாயபூர்வமான அரசியல் கோரிக்கைகளைக் கிஞ்சித்தும் திருப்தி செய்யும் வகையில் ஒற்றையாட்சி அமைப்புக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த 13 ஆவது திருத்தச்சட்டம் அமையவில்லை. அபிவிருத்திகள் கூட எம்மக்கள் நினைத்தவாறு நடைபெற இடமில்லை. யாவையும் மத்தியின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வருகின்றன.

அதிகாரப் பரவலாக்கம் என்று கூறினாலும் பல்வேறு குறைபாடுகளை 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆளுநரே நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றார். நான் முதலமைச்சராக இருந்த போது சில அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்தமை தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை இதற்கு ஒரு சிறந்த உதாரணம். முதலமைச்சர் தீர்மானங்களை ஆளுநர் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சட்டம் எதிர்பார்த்திருக்க முதலமைச்சரின் தீர்மானத்தை வர்த்தமானியில் ஆளுநர் தனக்கே தெரிந்த காரணங்களுக்காகப் பிரசுரிக்காது விட்டமையால், ஆளுநருக்கே அமைச்சர்களை நியமிக்கும் மற்றும் பதவி இறக்கும் அதிகாரம் உள்ளது என்று நீதிமன்றம் கூறுமளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

ஜனாதிபதியின் கையாளான ஆளுநரின் பிழைகளைத் தட்டிக் கேட்க நீதிமன்றங்களே தயங்குகின்றன. ஜனாதிபதியின் கைகளிலேயே மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரம் இருக்கின்றது. ஆளுநரின் அதிகாரம் மற்றும் அவரின் செயற்பாடுகள் ஜனாதிபதியினால் கட்டுப்படுத்தப்படக் கூடியன. அவ்வாறெனின் குறித்த சட்டத்தின் கீழான அதிகாரப் பரவலாக்கத்தின் நோக்கம் தான் என்ன? வெறும் கண்துடைப்பே என்பது எனது பார்வை மற்றும் ஆளுநரின் அனுமதி இன்றி மாகாண சபையின் நிதியத்தை மாகாண சபை கையாள முடியாது.

நான் முதலமைச்சராக இருந்த போது முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதற்குப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்த போதும்கூட அரசாங்கம் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. மேலும் வெண்ணெய் திரண்டு கொண்டு வந்தபோது தாழியை உடைத்தது போல் பழங்கள், மரக்கறிகளை வன்னியில் பயிர் செய்து அவற்றை ஏற்றுமதி செய்ய நாம் பாடுபட்டு உருவாக்கிய செயற்றிட்டம ஒன்று காணியின் ஒருபகுதி வன இலாகாவிற்கு சொந்தம் என்ற ஒரு புனைந்துரைக்கப்பட்ட கூற்றின் மூலம் தடை செய்யப்பட்டது.

முழு நாட்டிற்கும் வரவிருந்த பொருளாதார நன்மை மத்திய அரசாங்கத்தின் குறுகிய காழ்ப்புணர்ச்சி எண்ணங்களால் நடைமுறைப்படுத்தப்படாது போனது. வடமாகாணம் தானாக விருத்தியடைவதை மத்தி விரும்பவில்லை என்பது கண்கூடு. அடுத்து பொலிஸ் மற்றும் ஒழுங்கு தொடர்பிலான அதிகாரம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது. காணி உட்பட பல்வேறு அதிகாரங்களும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி வசமே இருக்கின்றன.

இந்த 13 ஆவது திருத்தச்சட்டத்தின் வழியாகவே மத்திய அரசாங்கத்தின் பல்வேறு திணைக்களங்களும் அதிகார சபைகளும் வடக்கு,கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைப் பெருமளவில் அபகரித்துள்ளன. அவை எம் பிரதேசங்களில் பௌத்த மயமாக்கலிலும் ஈடுபட்டுள்ளன. நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் நடைபெறுவதை இன்று நாடறியும். இவ்வாறான பௌத்த பிக்குகளின் கெடுபிடிகள் வடகிழக்கில் தொடருமானால் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வடகிழக்குத் தமிழ் மக்கள் பௌத்தத்தைக் கைவிட்டு தமது முன்னைய மதமான சைவத்திற்குத் திரும்பிய எமது மக்களை மீண்டும் பௌத்தத்திற்குள் பலாத்காரமாக மத மாற்றம் செய்வதாக ஆகிவிடும்.

இத்தகைய குறைபாடுகள் காரணமாகவே இந்தத் திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் தமிழ் தலைமைகள் மீண்டும் மீண்டும் இதனை நிராகரித்து வந்துள்ளனர். முதலில் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28 ஆம் திகதி எமது எதிர்ப்பு இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கு தெரியப்படுத்தப்பட்டது. அதன் பின் தொடர்ந்து எமது குறைகளை அரசாங்கத்திற்கும் அகில நாடுகளுக்கும் எடுத்தியம்பி வருகின்றோம்.

ஆகவே, 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோருவதன் மூலம் இலங்கையில் தமிழ் மக்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்யலாம் என்றோ அல்லது அவர்களின் தனித்துவத்தை நிலை நிறுத்தலாம் என்றோ அல்லது அவர்களின் நீண்டகால நியாயபூர்வமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யலாம் என்றோ இந்தியா எதிர்பார்க்க முடியாது.

வேண்டுமெனில் முழுமையான ஒரு தீர்வை நோக்கி நடக்க திருத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டமானது தற்காலிகமாகப் பாவிக்கப்படலாம். 13 ஆவது திருத்தச் சட்டம் இன்று இல்லையென்றால் அடுத்த நாளே பெரும்பான்மையினத்தின் முழுமையான ஆக்கிரமிப்பு வடகிழக்கில் நடைபெறும்.

அதேவேளை, தொடர்ந்து வரும் இலங்கை அரசாங்கங்களின் சந்தர்ப்பவாத மனமாற்றங்களோ அல்லது சந்தர்ப்பவாத அணுகுமுறைகளோ இந்தியாவின் தேசியப் பாதுகாப்பை நீண்டகால அடிப்படையில் உறுதி செய்ய உதவாது என்பதை இந்தியா புரிந்து கொண்டுள்ளது என்பதே எமது கூர்நோக்கு. ஆகவே, நீண்டகால அடிப்படையில் இலங்கையில் தமிழ் மக்களின் நிலையான பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்தும் வகையிலும் இந்திய நலன்களை உறுதிப்படுத்தும் வகையிலும் இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வினை ஏற்படுத்துவதற்கு இந்தியா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றேன்.

அதேவேளை, பெரும்பான்மை சமூகம் விரும்பாத எதனையும் இலங்கையில் செய்யமுடியாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திரும்பத்திரும்ப கூறிவருகிறார். இலங்கையில் உள்ள எல்லா இன மக்களும் சமனாகக் கருதப்படவில்லை என்பதற்கு இந்தக் கூற்றே சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது. வடகிழக்குத் தமிழ் மக்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள். சிங்களமொழி நடைமுறைக்கு வந்தது கி.பி ஆம் அல்லது 7 ஆம் நூற்றாண்டில், அதற்கு முன்னர் சிங்கள மொழி பேசுவோர் இலங்கையில் இருந்ததில்லை. வட கிழக்கில் இன்றும் நாமேபெரும்பான்மையினர்.

பின் எவ்வாறு சிங்களப் பெரும்பான்மையினர் விரும்பாத எதனையும் இலங்கையில் செய்ய முடியாது என்று எமது ஜனாதிபதி கூறலாம்? அவ்வாறெனின் இலங்கையில் தற்போது பெரும்பான்மை சிங்கள மக்களின் வல்லாட்சி பரிணமித்துவிட்டதா? நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு,கிழக்கில் உள்ள ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களும் இனப் பிரச்சினைக்கான அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி வாக்களித்துள்ளமை சிங்கள மற்றும் தமிழ் மக்களின் திரட்சிகள் எதிர் எதிர் அணுகு முறைகளில் இருப்பதையும் அவர்களுக்கு இடையிலான முரண் நிலை கூர்மை அடைந்திருப்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வு விரைந்து காணப்பட வேண்டியதன் அவசியத்தை இது வலியுறுத்துவதுடன் இந்தியாவின் பாதுகாப்பும் இந்தத் தீர்விலேயே தங்கி உள்ளது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒதியமலை படுகொலை 35 ஆவது ஆண்டு நினைவு நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு





(குருமன்காடு)

முல்லைத்தீவு மாவட்டம் ஒதியமலை கிராமத்தில் கடந்த 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 2 ஆம் திகதி 1984.12.02 அன்று இராணுவ சீருடை தரித்தவர்களால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் நினைவு தினம் நேற்று ஒதியமலையில் அனுஷ்டிக்கப்பட்டது. ஒதியமலை வாசிகசாலையில் அமைக்கப்பட்டுள்ள அவர்களது நினைவுத்தூபி முன்பாக இடம் பெற்ற இந்நிகழ்வில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் தீபம் ஏற்றியும் மலர்மாலை அணிவித்தும் மலர் தூவியும் தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இப்படுகொலையில் உறவுகளை பறிகொடுத்த கிராம மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

1984.12.02 ஆம் ஆண்டு அதிகாலையில் இராணுவச் சீருடையில் கிராமத்திற்குள் புகுந்த ஆயுததாரிகள் ஒதியமலை கிராமத்திலுள்ள வீடுகளில் இருந்த ஆண்களை இவ்வாசிகசாலைக்கு வருமாறு அழைத்து அவர்களை சுட்டுப் படு கொலை செய்தார்கள் என தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், க.சிவனேசன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர், வவுனியா வடக்கு பிரதேச சபைத் தலைவர் தணிகாசலம் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அவ்வூர் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (9-250-281)

## வடக்கில் தொடரும் மழையால்
# குளங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு
## பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

அண்மைய நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக வடக்கில் உள்ள குளங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து வருகிறது. இதனால் சில குளங்கள் வான்பாய ஆரம்பித்ததுடன் மேலும் சில குளங்கள் வான் மட்டத்தை அடைந்து வருகிறது.

குறித்த மழை காரணமாக வெள்ளம் மேவி பாய்வதானால் பல பகுதிகளில் உள்ள விவசாய நடவடிக்கையில் குறிப்பாக உப உணவுப் பயிர்கள் பெரும் அழிவை எதிர் கொண்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் மிகப் பெரிய நீர்பாசனக்குளமான இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 25 அடியாக உயர்ந்துள்ளது. இதே வேளை அக்கராயன் குளத்தின் நீர் மட்டம் 16 அடியாகவும், கரியாலை நாகபடுவான் குளத்தின் நீர்மட்டம் 6.5 அடியாகவும், புதுமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் 13 அடியாகவும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடமுருட்டிக்குளம், பிரமந்தனாறுகுளம், வன்னேரிக்குளம் ஆகியன தற்போது வான் பாய ஆரம்பித்துள்ளது. மேலும் கனகாம்பிகைக்குளம் , கல்மடுகுளம் ஆகியன விரைவில் வான்பாய ஆரம்பிக்கலாம் என நீர்ப்பாசன பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குளங்கள் அனைத்தும் நீர் நிரம்பிக்காணப்படுகின்றன. அந்த வகையில் புத்துவெட்டுவான்,மருதங்குளம் உடைப்பெடுக்கும் அபாயத்திலுள்ளது. குறித்த குளத்தின் கலுங்கி கட்டுப்பகுதியால் பாரிய அளவில் நீர்க்கசிவும் ஏற்பட்டுள்ளது. நீர்க்கசிவினை தடுப்பதற்கான முயற்சியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டபோதும் அந்த முயற்சி பயனளிக்கவில்லை.

குளத்தின் வால்கட்டுப் பகுதியால், சுமார் இரண்டு அடியளவில் நீரை வெட்டி வெளியேற்றுவதற்கான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் நந்திக்கடல் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளதால் வயல் நிலங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன. அதேவேளை வட்டுவாகல் பாலத்தினால் போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்

அதேவேளை மன்னார் மாவட்டத்தில் வடமாகாணத்தின் இரண்டாவது பெரியகுளமாக காணப்படும் மன்னார் முருங்கன் கட்டுக்கரை குளம் நிறைந்து வான் பாய்ந்து வருகின்றது. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த ஏனைய பல சிறிய மற்றும் நடுத்தர குளங்களும் நிறைந்து வான் பாய்ந்து வருகின்றது.

இதனால் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்கான காலபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 200 ஏக்கர் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் வயல் நிலங்களில் மழைநீர் தேங்கி காணப்படுவதனால் முளைத்த நிலையில் காணப்பட்ட நெற்பயிர்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் தற்போதும் குளங்களுக்கான நீர் வருகை தொடர்ந்தும் காணப்படும் நிலையில் குளங்கள் நிரம்பி வருவதாகவும், நீர்நிலைகளில் நீராடச்செல்லுதல், சிறுவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் அந்தந்த மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

(9-100-281-285-286-315-316)

# காணாமல் ஆக்கப்பட்டமை இனப்படுகொலையே!
## வவுனியாவில் போராட்டம்




(குருமன்காடு)

செட்டிகுளத்தில் 52 தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டு 35 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் அதனை நினைவுகூர்ந்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

1017 ஆவது நாளாக வவுனியா, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் இக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் 2 ஆம் திகதி செட்டிகுளம் பகுதியில் 52 தமிழர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர்கள் இன்றுவரை வீடு திரும்பவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சர்வதேசம் தலையிட்டு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனப் போராட்டத்தில் கோரிக்கை விடுத்தனர். (9-250-299)




# புதையல் தோண்டியதாக கைதாகிய மாணவன் சிறையிலிருந்து பரீட்சை எழுத அனுமதி

(குருமன்காடு)

வவுனியா, அண்ணாநகர் பகுதியில் சகோதரர்களுடன் இணைந்து வீட்டில் புதையல் தோண்டியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மாணவன் சிறைச்சாலையில் இருந்து பரீட்சை எழுதுவதற்கு வவுனியா பதில் நீதவான் ஆருரன் அனுமதி வழங்கியுள்ளார்.

வவுனியா, அண்ணாநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புதையல் தோண்டியதாக மூன்று சகோதரர்களை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் காலை கைது செய்திருந்தனர். அதில் ஒருவர் இம்முறை கல்விப்பொது சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள 16 வயது மாணவன் ஆவார்.

இந்நிலையில் குறித்த மூவரையும் வவுனியா பதில் நீதவான் ஆருரனின் வாசஸ்தலத்தில் முற் படுத்திய போது குறித்த மாணவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மாணவன் இம்முறை பரீட்சைக்கு தோற்றவுள்ளதால் அவரை பிணையில் விடுதலை செய்யுமாறு விண்ணப்பம் ஒன்றை முன்வைத்திருந் தார். குறித்த விடயத்தை கவனத்தில் எடுத்த பதில் நீதவான் பிணை விண்ணப்பத்தை நிராகரித்ததுடன், சிறைச்சாலையில் இரு ந்து பாடசாலைக்கு சென்று பரீட்சை எழுத அனுமதி வழங்கினார். (9-250)




**கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த வாரம் பாடசாலை அதிபர் அ.சிவகணேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் முதன்மை விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் க.மதுரநாயகம், அக்கராயன் பிரதேச வைத்தியசாலை வைத்திய கலாநிதி திஷானி சேரலாதன், கௌரவ விருந்தினராக ஆனைவிழுந்தான் போதகர் ஆ.ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள்:- அக்கராயன் செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செட்டிகுளம் படுகொலையின் 35ஆம் ஆண்டு நினைவுநாள் அனுஷ்டிப்பு





(நெளுக்குளம்)

செட்டிகுளம் பகுதியில் கடந்த 1984 ஆம் ஆண்டு மார்கழி 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட 52 பேரின், 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு செட்டிகுளம் விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

செட்டிகுளம் பிரதேசசபை மற்றும் பொதுமக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களுக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் மதகுருக்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.



இனிவரும் காலங்களில் குறித்த நினைவு நாளை செட்டிகுளம் பகுதியில் துக்கதினமாக அனுஷ்டிப்பதுடன் நினைவுத்தூபி ஒன்றையும் அமைக்கவுள்ளதாக செட்டிகுளம் பிரதேச சபையின் தவிசாளர் ஆ.அந்தோனி இதன்போது தெரிவித்தார். (9-299)

## பரிசளிப்பு விழா

(பூநகரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் பரிசளிப்பு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூநகரி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவு ள்ளது.

பூநகரி பிரதேச சபை தவிசாளர் அ.ஜெயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சிறப்பு விருந்தினர்களான கிளிநொச்சி பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் ந. பிரபாகரன், கிளிநொச்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் க. தனபாலசிங்கம், கிளி/ மட்டுவில் நாடு அ.த.க.பாடசாலை அதிபர் சி.விசுவாசம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9-84)




## வவுனியாவில் சிறுவர்களுக்கான விழிப்புணர்வு





(குருமன்காடு)

எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் சிறுவர் நேரலை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜெ. ஜெயக்கெனடி தலைமையில் இடம்பெற்ற இந்த விழிப்புணர்வு செயற்றிட்ட நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம். ஹனீபா, வவுனியா மாவட்ட உதவி அரச அதிபர் என்.கமலதாசன் ஆகியோர் கலந்து கொண்டு மரணமடைந்த வவுனியா மாவட்ட முன்னாள் அரச அதிபர் லங்கா நேசனுக்கு ஒரு நிமிட அஞ்சலி செலுத்தியதுடன் விழிப்புணர்வு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிராக எவ்வாறு மாணவர்கள் செயற்படுவது போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக சிறுவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டதுடன் இதில் 50 இற்கு மேற்பட்ட வவுனியா மாவட்ட சிறுவர் சபையினை சேர்ந்த சிறுவர்கள் பங்குபற்றியிருந்தனர். (9-250)

## தொடர் மழை காரணமாக
# கண்டாவளை பிரதேசத்தில் 53 குடும்பங்கள் பாதிப்பு

(முறிகண்டி)



தொடர் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேசத்தில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 138 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட் பட்ட பரந்தன் கிராம உத்தி யோகத்தர் பிரிவில் 47 குடும்பங்களைச் சேர்ந்த 121 பேர் பாதி க்கப்பட்டுள்ளதாகவும் பிரமந்தனாறு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பாரிய அளவி லான பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனவும் பாதிப்புக்கள் தொடர்பான விபரங்கள் தொடர்ந்தும் திரட்டப்பட்டு வருவதாகவும் 24 மணி நேர கண்காணிப்பு மற்றும் அவதானிப்புக்களில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் ஈடுபட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

பாதிப்பிற்குள்ளான குடும்பங்கள் தொடர்பான விபரங்கள் தொடர்ந்தும் திரட்டப்பட்டு வரும் நிலையில், அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் விரைந்து மக்களுக்கான தேவைகள் மற்றும் பாதுகாப்புக்களை மேற்கொள்வதற்கு தாம் தயா ராகவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (9-100-312)



வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவி செல்வி ரோகிதா புஸ்பதேவனின் நோயாளர்களின் தன்னியக்க இரத்தப் பரிசோதனை உபகரணத்தின் புத்தாக்க கண்டுபிடிப்பிற்கான ஊக்குவிப்பு வழுங்கப்பட்டது.வவுனியா நகரசபை உறுப்பினர் சு. காண்டீபனின் சிறிய தந்தையான அவுஸ்திரேலியாவில் வசித்துவரும் சண்முகம் சந்திரனின் அன்பளிப்பில் 10 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பு தொகையாக வழுங்கப்பட்டது. இந் நிகழ்வில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பி.கமலேஸ்வரி, தொழில்நுட்ப பாட ஆசிரியர் சாய்பிரசாத் ஆகியோர் முன்னிலையில் ஆசிரியர் திருமதி ப.காண்டீபனால் மாணவியிடம் கையளிக்கப்பட்டது.

(படம்:- நெளுக்குளம் செய்தியாளர்)

## கலைவிழாவும் பெற்றோர் கௌரவிப்பும்





(நெளுக்குளம்)

வவுனியா பூந்தோட்டம் கலைமகள் முன்பள்ளியின் பெற்றோர் தின விழாவும் கலைவிழா நிகழ்வும் முன்பள்ளி முகாமைத்துவ குழுவின் தலைவர் ப.ரவிசங்கர் தலைமையில் நேற்று முன்தினம் பூந்தோட்டம் லக்சுமி சமேத நரசிங்கர் ஆலய கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிறப்பு விருந்தினர்களாக வைத்தியர் எஸ்.பஞ்சலிங்கம், சனசமூக நிலைய செயலாளர் ந.கருணாநிதி, மயான அபிவிருத்தி சங்க தலைவர் இ.பாஸ்கரன், முன்பள்ளி ஆசிரியர் சி.ராகினி பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன. (9-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## சுவர் இடிந்து விழுந்ததில் 17 பேர் உயிரிழப்பு

(சென்னை)

மேட்டுப்பாளையம் அருகே நடூர்–ஏடிக்காலனி பகுதியில் சுவர் இடிந்து விழுந்ததில் 17 பேர் உயிரிழந்தனர்.

மேலும் இந்த அனர்த்தத்தில் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள ஏனையவர்களை மீட்கும் நடவடிக்கையில் தீயணைப்புத் துறையினர் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றனர். மேட்டுப்பாளையம் அருகே நடூர்–ஏடிக் காலனி பகுதியில் சுவர் இடிந்து அருகில் உள்ள 4 வீடுகள் மீது விழுந்தது.

இதில் 4 வீடுகளில் இருந்தவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கினர். இதனையடுத்து அவர்களை மீட்கும் நடவடிக்கையில் தீயணைப்புத் துறையினர் மற்றும்



பொது மக்கள் இணைந்து ஈடுபட்டனர். அதற்கமைய இதுவரையில் 17 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் 4 வீடுகளில் இருந்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எனினும் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## பிலிப்பைன்ஸிலுள்ள கிர[ாமம்] மெல்ல மெல்ல கடலில் [மூழ்கி...]

(மணிலா)

கடல்நீர் மட்டம் அதிகரிப்பால், பிலிப்பைன்ஸில் உள்ள சிடியோ பரிஹான் கிராமம், கடலில் மெல்ல மெல்ல மூழ்கி வருவதாக அதிர்ச்சி தகவலொன்று வெளியாகியது.

இதன்படி, புவி வெப்பமயமாதல் பிரச்சினையால் கடல்நீர் மட்டம் அதிகரித்து வருவதால், ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4 சென்ரிமீற்றர் அளவிற்கு இந்தக் கிராமம் கடலில் மூழ்கிக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டது.

கிராமத்தில் உள்ள மக்கள் அனைவரும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்கள் என்பதால் வேறு எங்கும் செல்ல முடியாமல் இன்னல்களுக்கு மத்தியில் அங்கேயே வசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, அவர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள, கடலின் நீர்



மட்டத்தின் உயரம் அதிகரிக்க அதிகரிக்க கிராம மக்கள் மூங்கில்களை கொண்டு வீட்டினை உயர்த்தி வருகின்றனர்.

மணிலாவில் இருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ள சிடியோ பரிஹான் கிராமம், ஒரு காலத்தில் தீவாக இருந்து தற்போது நிலப்பரப்பே கண்

## காஷ்மீரில் பயங்கரவாதிகளின் இரகசிய முகாம் கண்டுபிடிப்பு



காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் இரகசிய முகாமைக் கண்டுபிடித்த பாதுகாப்புப் படையினர் இயந்திர துப்பாக்கிகள், தோட்டாக்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்.

வடக்கு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் கண்காணிப்பு மற்றும் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு படையினர், சோபோர் அருகாமையிலுள்ள ரபியாபாத் பகுதியில் பயங்கரவாதிகளின் இரகசிய பதுங்குமிடத்தை கண்டுபிடித்தனர்.

அங்கிருந்து இரு ஏ.கே.47 இயந்திர துப்பாக்கிகள், 2 ஆயிரம் தோட்டாக்கள், இரு வயர்லெஸ் (Wireless) கருவிகள் மற்றும் ஒரு செய்மதி (Satellite) தொலைபேசி ஆகியவற்றை பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஜ-2)

## ஆற்றில் பேருந்து [கவிழ்ந்து] பத்துப் பேர் பலி- ர[ஷ்யாவில்]

(மொஸ்கோ)

ரஷ்யாவில் ஆற்றில் பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்துள்ளமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்தில் மேலும் 21 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ரஷ்யாவின் சபாகல்ஸ்கி மாகாணத்தின் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை 40 பேருடன் பயணித்த பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

மகோய்டுய்- ஸ்ரெடென்சிக்-



## அமேசன் காடுகளுக்கு தீ வைக்க நான் பணம் கொடுக்கவில்லை

### பிரேசில் ஜனாதிபதியின் குற்றச்சாட்டை நிராகரித்த ஹொலிவுட் நடிகர்

(பிரேசில்)

உலகளவில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய அமேசன் காட்டுக்கு, தீ வைக்க பிரபல ஹொலிவுட் நடிகர் லியனார்டோ டி காப்ரியோ தான் பணம் கொடுத்தார் என பிரேசில் ஜனாதிபதி சயீர் பொல் சனாரூ முன்வைத்த குற்றச்சாட்டை நடிகர் லியனார்டோ டி காப்ரியோ மறுத்துள்ளார்.

'உலகின் நுரையீரல்' என்று அழைக்கப்படும் அமேசன் மழைக்காடுகளில் கடந்த ஓகஸ்ட் மாதம் மிகப்பெரிய அளவில் காட்டுத்தீ ஏற்பட்டது.

முன்னெப்போதும் நிகழாத வகையில் ஒரே சமயத்தில் ஆயிரம் இடங்களில் தீப்பற்றி எரிந்ததால் இது உலகளவில் கவனம் ஈர்த்தது.

இந்த காட்டுத்தீயினால் அரிய வகை உயிரினங்கள், தாவரங்கள் என மனிதனே கண்டிராத பல பொக்கிஷங்கள் எரிந்து நாசமாகின.

இந்தக் காட்டுத்தீயினை கட்டுக்குள் கொண்டுவர பல உலக நாடுகள் முன்வந்தபோதும், இதனை பிரேசில் ஜனாதிபதி சயீர் பொல்சனாரூ ஏற்க மறுத்தார். இதனால், பிரேசில் ஜனாதிபதி சயீர் பொல்சனாரூ மீது உலகநாடுகள் சந்தேகம் கொண்டன.

இந்தநிலையில் காலம் கடந்து அமேசன் காட்டுக்கு, தீ வைக்க பிரபல ஹொலிவுட் நடிகர் லியனார்டோ டி காப்ரியோ தான் பணம் கொடுத்தார் என பிரேசில் ஜனாதிபதி சயீர் பொல் சனாரூ பரபரப்பு குற்றச் சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்த அவர் சமூகவலைத்தளத்தில் அறிக்கையொன்றினை பதிவு செய்துள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, "அமேசன் பகுதியில் பிரச்சினை ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், தங்களது இயற்கை வளத்தையும் பாரம்பரிய கலாசாரத்தையும் பாதுகாக்க போராடும் பிரேசில் மக்களுக்கு எனது ஆதரவை தெரிவிக்கிறேன்.

ஆதரவு தெரிவிக்கும் நேரத்தில், அமைப்புகளுக்கு நாங்கள் பண உதவி செய்வது கிடையாது.

பிரேசில் மக்களின் எதிர்காலத்திற்காக அமேசனை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள், கல்வியாளர்களுக்கு நான் எப்போதும் உறுதுணையாக இருப்பேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உலகப் புகழ்பெற்ற டைட்டானிக் படத்தில் நடித்து புகழ்பெற்ற பிரபல ஹொலிவுட் நடிகரும், சுற்றுச்சூழல் ஆர்வலருமான லியனார்டோ டி காப்ரியோ, அமேசன் காடுகளைக் காக்க 5 மில்லியன் டொலர்கள் நிதி வழங்குவதாக உறுதி அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## தமிழக உள்ளூராட்[சி...]

(சென்னை)

தமிழகத்தில் உள்ளூராட்சி தேர்தல் 2 கட்[டங்களாக நட]த்தப்படவுள்ளதாக மாநில தேர்தல் ஆணையர் [அறி]வித்தார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள மா[நில தேர்தல்] ஆணைய அலுவலகத்தில் மாநில தேர்தல் [ஆணையர்] பழனிசாமி நேற்றுக் காலை ஊடகங்களுக்கு க[ருத்து தெரிவிக்கு]ம்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தமிழகத்தில் உள்ளூராட்சி [தேர்தல்] அட்டவணையை வெளியிட்டார்.

அதன்படி தமிழகத்தில் 2 கட்டங்களாக உ[ள்ளூராட்சி...]




(மெக்சிக்கோ சிட்டி)

மெக்சிக்கோ நாட்டின் கோஹய்லா மாநிலத்திற்குட்பட்ட குடியிருப்பு பகுதியில் சூறையாடுவதற்கு வந்த ஆயுதமேந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## கிராமமொன்று ல் மூழ்குகிறது



அதி
ளை
த்தி
ி.மீ.
பரி
ாக
கண்

ணில் படாத வகையில் கடலில் மிதக்கும் கிராமமாக மாறியிருக்கிறது.

இந்த விடயம் தற்போது சர்வ தேசமே உற்றுநோக்கும் விடயமாக மாறியிருப்பதால், இதற்கு நிரந்தர தீர்வொன்றை பெற்றுத்தருமாறு அக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ஐ-2)

## ஆபிரிக்க தேவாலயத்தில் துப்பாக்கிச்சூடு; 14 பேர் உயிரிழப்பு,பலர் காயம்

(அடிஸ் அபாபா)

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவில் துப்பாக்கி ஏந்திய நபர் நடத்திய தாக்குதலில் 14 பேர் பலியாகினர்.

இதுகுறித்து ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், "புர்கினோ பாசோவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஹண்டோகவுரா நகரில் உள்ள தேவாலயம் ஒன்றில் துப்பாக்கி ஏந்திய நபர் நடத்திய தாக்குதலில் 14 பேர் பலியாகினர். பலர் காய மடைந்தனர். இந்தத் தாக்குதல் குறித்து புர்கினோ ஃபாசோ



ஜனாதிபதி தனது டுவிட்டரில் கண்டனம் தெரிவித்தார்.

மேலும், " இது காட்டு மிரண்டித்தனமான தாக்குதல். தாக்குதலில் பலியானவர்களுக்கு எனது இரங்கலைத் தெரிவித்து கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனைகள் என்று பதிவிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த குறிப்பிட்ட தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

எனினும் இந்தத் தாக்குதலை ஐ.எஸ்.தீவிரவாதிகளின் கிளை தீவிரவாத இயக்கங்கள் நடத்தி இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவித்தனர். (ஐ-2)

## கவிழ்ந்து விபத்து; ரஷ்யாவில் சோகம்



ஒலோச்சி நெடுஞ்சாலையில் உள்ள பாலத்தில் பேருந்து பயணித்த போது, பேருந்தின் முன் பக்க ரயர் திடீரென வெடித்தது.

இதனால் நிலைகுலைந்த பேருந்து பாலத்தில் இருந்து விலகி ஆற்றில் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் 19 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தகவலறிந்து அங்கு சென்ற மீட்புக் குழுவினர் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## உலகப் புகழ்பெற்ற மலையேற்ற வீரர் மலையுச்சியில் இருந்து விழுந்து உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவை சேர்ந்த உலகப் புகழ்பெற்ற மலையேற்ற வீரர் பிராட் கோப்ரைட் ஆயிரம் அடி உயரமான மலையின் உச்சியிலிருந்து தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

பிராட் கோப்ரைட் மற்றும் அவரது நண்பரான சக மலையேற்ற வீரர் அய்டன் ஜேக்கப்சன் ஆகிய இருவரும் மெக்சிக்கோ நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள 'எல் பொட்ரெரோ சிக்கோ' மலையில் ஏறியுள்ளனர். அப்போது பிராட் கோப்ரைட் மலையின் உச்சியை அடைந்த நிலையில் சற்றும் எதிர்பாராத வகையில் தவறி வீழ்ந்ததிலேயே இந்த உயிரிழப்பு நேர்ந்தது.

31 வயதுடைய இவர் எவ்வித பாதுகாப்பு உபகரணமும் இல்லாமல் மலையேறுவதில் வல்லவர். இதனால் இவர் உலகம் முழுவதும் பிரபலமான மலையேற்ற வீரராக திகழ்ந்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள உலகின் மிக உயரமான சிகரங்களில் ஒன்றான 'எல் கேப்டன்' சிகரத்தில் எந்தவிதப் பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி மிகக் குறுகிய நேரத்தில் ஏறிச் சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிராட் கோப்ரைட்டின் இறப்புக்கு உலகம் முழுவதிலும் உள்ள மலையேற்ற வீரர்கள் அதிர்ச்சியும், இரங்கலும் தெரிவித்தனர். (ஐ-2)

## ராட்சி தேர்தல் அட்டவணை வெளியீடு

2 கட்டங்களாக நடத்
ணையர் பழனிசாமி அறி

ள மாநில தேர்தல்
தேர்தல் ஆணையர்
ருக்கு கருத்து வெளியி
ார்.
ராட்சி தேர்தல் திகதி

ாக உள்ளூராட்சி தேர்

தல் நடத்தப்படவுள்ளது. டிசெம்பர் 27 மற்றும் 30ஆம் திகதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுமென தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வேட்புமனுத் தாக்கல் டிசெம்பர் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வேட்பு மனுத்தாக்கல் செய்ய இறுதி நாள் டிசெம்பர் 13 என்றும் வேட்பு மனுக்களை திரும்பப்பெறுவதற்கான இறுதி நாள் டிசெம்பர் 18ஆம் திகதி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜனவரி 2ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்தது. (ஐ-2)

## அமெரிக்க ஜனாதிபதி-இஸ்ரேல் பிரதமர் ஈரானின் மிரட்டல் குறித்து ஆலோசனை

(ரோஷிங்டன்)

அமெரிக்காவுடன் இனி பேச்சுவார்த்தை கிடையாது என ஈரான் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதியும் இஸ்ரேல் பிரதமரும் ஆலோசனை நடத்தினர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஈரான் நாட்டின் மிரட்டல் குறித்தும் அதேவேளையில் இரு தரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய விவகாரங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது' என தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பதவி விலக வேண்டுமென, அந் நாட்டில் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்ற நிலையில், இந்த சந்திப்பு மிக முக்கியமானதொன்றாக பார்க்கப்படுகின்றது.

ஈரான் நாட்டுடனான அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகியதையடுத்து, ஈரான் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது. அமெரிக்கா நடவடிக்கையில் கடும் அதிருப்தியடைந்த ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிக்கும் பணியை விரைவுபடுத்தியது. அண்மையில், அணு ஆயுதம் தயாரிக்கப் பயன்படும் முக்கிய மூலப் பொருளான யுரேனியம் உற்பத்தியை ஈரான் 10 மடங்காக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## மெக்சிக்கோவில் ஆயுதக்கும்பலுடன் பொலிஸார் மோதல் ; 14 பேர் பலி



கும்பலுடன் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சண்டையில் 14 பேர் உயிரிழந்தனர்.

ா
ல்
ப

ஹெரோயின், கஞ்சா, அபின், பிரவுன் ஷுகர் உள்ளிட்ட போதைப்பொருள் கடத்தல் மற்றும் உற்பத்தியில் உலகின் முக்கிய நாடாக மெக்சிக்கோ விளங்கி வருகிறது. இங்குள்ள போதைப்பொருள் மாபியாக்கள் கொலை, கொள்ளை போன்ற தாக்குதல்களால் ஒருவரை மற்றவர் பழிதீர்த்து வருகின்றனர். இதுதவிர, அபின் செடிகளை வளர்ப்பதிலும், வெளிநாட்டு தரகர்களுக்கு பொருட்களை விற்பனை செய்வதிலும் இங்குள்ள மாபியாக்களுக்கு இடையே கடுமையான போட்டி நிலவி வருகிறது. கடத்தல் பேர்வழிகளின் நடமாட்டம் நிறைந்த பகுதிகளில் அண்மைக்காலமாக மர்மப் பிணங்கள் வரிசையாக கண்டெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தின் எல்லையோரத்தில் அமைந்துள்ள மெக்சிகோவின் கோஹுய்லா மாநிலத்திற்குட்பட்ட வில்லா யூனியன் குடியிருப்பு பகுதியில் கொள்ளையடித்து, சூறையாடுவதற்காக நேற்றிரவு வந்த ஆயுதமேந்திய கும்பல் அங்குள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் மீது அதிரடியாக தாக்குதல் நடத்தியது. சில வாகனங்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸார் அவர்களுடன் சுமார் ஒருமணி நேரம் நடத்திய துப்பாக்கிச் சமரில் 4 பொலிஸ் அதிகாரிகள் உட்பட 14 பேர் உயிரிழந்தனர். (ஐ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைச் சமூகம் திட்டமிட்டு ஓரங்கட்டல்

## அரவிந்தகுமார் எம்.பி.கவலை



(பதுளை)

**புதிய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்ட விடயத்தில் சிறுபான்மைச் சமூகம் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் கவலை வெளியிட்டார்.**

பதுளையில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம் மக்கள் சார்பில் எவருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படாமை கவலைக்குரியது.

இந்தச் செயற்பாடு இன ரீதியான முறுகல் நிலைக்கு வித்திட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் ஜனநாயக நாட்டில் அனைத்து இனமக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

மேலும் கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு எந்தவொரு பிரதிநிதியையும் புதிய அரசாங்கம் ஏற்படுத்தத் தவறியுள்ளமை அந்த மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் செயல் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## ஜனாதிபதி கோட்டாபயவின் மனைவி

# அயோமாவிற்கு அபராதம் விதித்த பொலிஸார்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபயவின் மனைவி அயோமா ராஜபக்ஷ பயணித்த வாகனம் பொலிஸாரிடம் சிக்கியமையால் அபராதம் செலுத்த நேரிட்டதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டது.

அநுராதபுரத்தில் வழிபாடுகள் மேற்கொள்ளச் சென்ற சந்தர்ப்பத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வீதிப்போக்குவரத்து விதிகளை மீறியமையால் அவர் பயணித்த வாகனத்தை பொலிஸார் நிறுத்தினர். ஜனாதிபதி



கோட்டாபயவின் மனைவி என்றதும் பொலிஸார் குழப்பம் அடைந்தனர்.

எனினும் எந்தப் பிரச்சினையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். தான் வாகனத்திற்குள் இருப்பதைக் கூறாமல் தவறை ஏற்றுக் கொண்டு, அபராதப் பத்திரத்தைத் தருமாறு அயோமா ராஜபக்ஷ தெரிவித்தார்.

மத வழிபாடு நிறைவடைந்து வீட்டிற்குச் சென்ற அயோமா, சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபயவிடம் தெரிவித்தார்.

இதன்போது அபராதப் பணத்தைச் செலுத்தி சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி தெரிவித்ததாகக் குறித்த ஊடகம் மேலும் தெரிவித்தது. (இ-7)

# ஜனாதிபதியை மகிழ்ச்சியில் ஆழ்த்திய ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம்



(கொழும்பு)

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

சிறந்த முறையில் விருந்தோம்பலை மேற்கொண்டமையால் ஜனாதிபதி மகிழ்ச்சியடைந்தார்.

தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை வெளியிட்ட அவர் "இலங்கையின் முறைபடி அளிக்கப்பட்ட விருந்தோம்பலுக்கு ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ்"க்கு நன்றிகள். இலங்கையின் கொடியை ஏந்திச் செல்லும் நமது தேசிய அடையாளமானது நம் நாட்டை மீண்டும் பெருமைப்படுத்தி பெயர் வாங்கச் செய்யும் என நம்புகின்றேன்" என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்த பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ தனது முதலாவது விஜயத்தை இந்தியாவிற்கு மேற்கொண்டிருந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு மீண்டும் நாடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# ட்ரோன் கமராவை பறக்கவிட்டவர் கைது

(ஹற்றன்)

நுவரெலியா-மீபிலிமான பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் ட்ரோன் கமராவை பறக்கவிட்ட நபர் கைது செய்யப்பட்டார்.

நுவரெலிய பொலிஸ் நிலைய விசேட அதிரடிப்படைப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 9 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள சேனாநந்த வித்தியாலய பகுதியில் வைத்தே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

பாதுகாப்பு அமைச்சு அல்லது சிவில் விமான சேவை ஆணைக் குழுவின் அனுமதியின்றியே குறித்த நபர் ட்ரோன் கமராவை பறக்கவிட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும், அவரிடமிரு



ந்த ட்ரோன் கமரா மற்றும் அதன் உதிரிப்பாகங்களை பொலிஸார் பறிமுதல் செய்ததாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குருபக்தி

"பக்தி மூன்று வகைப்படும்" என்கிறார் ஒரு பெரியவர். (திருமுருக கிருபானந்த வாரியார்) தெய்வ பக்தி, அடியார் பக்தி, குருபக்தி. அடியார் பக்தியை விட, தெய்வ பக்தியை விட குருபக்தி தான் மிகவும் சிறந்தது என்கிறார் அவர். தெய்வத்திடம் செய்த பாவம் குருநாதரிடம் தீருமாம்! குருநாதரிடமுள்ள பாவம் தெய்வத்திடம் தீராதாம்.

ஒரு காடு. அங்கே அயோததௌமியர் என்று ஒரு தபோதனர். அவர் பல மாணவர்களை ஒன்று சேர்த்து ஒரு குருகுலம் நடத்திக் கொண்டிருந்தார். பல தரப்பட்ட மாணவர்கள் அதில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தார்கள். பாஞ்சால ராஜகுமாரன் ஒருவனும் அந்த குருகுலத்தில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தான். அவன் பெயர் "ஆருணி" பெரிய இடத்துப் பிள்ளையாயிருந்தாலும் படிப்பிலே மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான். அவன்தான் அங்கே முதல் மாணவன். ஒரு நாள் குருநாதர் அந்த அரசகுமாரனைக் கூப்பிட்டார்.

"நமது குருகுலத்துக்குச் சொந்தமான வயலிலே தண்ணீர் பெருகி பயிரை அழிக்கிறது! அதனாலே நீ போய் மடையை அடைத்து விட்டு வா!" என்றார்... அந்த அரசகுமாரன் உடனே புறப்பட்டான். "நான் பெரிய இடத்துப் பிள்ளை ஆச்சே... ராஜகுமாரனாச்சே... மிகவும் செல்வாக்குடன் வளர்ந்தவனாச்சே... நான் போய் வயலில் இறங்கி வேலை செய்வதா?" என்று எல்லாம் அவன் நினைக்கவில்லை!

"குருநாதர் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது நமது கடமை!" என்று நினைத்தான். உடனே ஒரு மண்வெட்டியைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு புறப்பட்டான். வயலுக்குப் போனான். பார்த்தான். தண்ணி கரையை உடைத்துக்கொண்டு வயலுக்குள்ளே ஏகமாக பாய்ந்கொண்டிருந்தது. இவன் மண்வெட்டியால் களிமண்ணை புல்லுடன் சேர்த்து வெட்டி பத்தை பத்தையாக போட்டான். இருந்தாலும் மடையை அடைக்க முடிவில்லை.

தண்ணி வேகமாக வயலுக்குள்ளே போய்க்கொண்டே இருந்தது. போடுகிற பத்தையெல்லாம் கரைந்து கரைந்து போய்க்கொண்டிருந்தது. இருந்தாலும் இவன் தன்னுடைய முயற்சியை கைவிடவில்லை! வெட்டி வெட்டி போட்டுக்கொண்டே இருந்தான்.

காலையில் அங்கே போனவன் மாலை வரைக்கும் இப்படியே செய்துகொண்டிருந்தான். உடம்பும் மனதும் மிகவும் சோர்ந்து போய்விட்டது! இருந்தாலும்... "குருநாதர் இட்ட கட்டளையை நிறைவேற்றாத நான் இன்னும் இருக்க வேண்டுமா" என்று யோசித்தான். என்ன செய்யலாம் என்று பார்த்தான்.

"நமது குருநாதர் இட்ட பணிக்காக இந்த உடம்பையே தியாகம் செய்யலாம்" என்று முடிவு செய்தேன். தண்ணி பாய்கிறது அல்லவா? அதற்குக் குறுக்கே விழுந்து மடையை அடைத்துக்கொண்டு படுத்தான். இது மற்றவர்களுக்குத் தெரியாது. அன்றைக்கு இரவு...ஒரு விளக்கு முன்னால் இருந்து குருநாதர் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார். முதல் வரிசையில் இருக்கக்கூடிய ராஜகுமாரனைக் காணவில்லை!

"ஆருணி எங்கே?" என்று மற்ற மாணவர்களை விசாரித்தார்! "சுவாமி! அவன் காலையில் வயலுக்கு மடையை அடைப்பதற்காகப் போனான். இன்னும் திரும்பி வரவில்லை!" என்றான் ஒரு பையன். குருநாதர் உடனே ஒரு தீவட்டியை எடுத்துக்கொண்டு மாணவர்கள் புடை சூழ வயலுக்குப் போனார். அங்கே போய்ப் பார்த்தால் ஆளைக் காணவில்லை.

"ஆருணி...! ஆருணி...!" என்று சத்தம் போட்டு கூப்பிட்டுப் பார்த்தார்... "நான் இங்கே இருக்கிறேன் குருநாதர்!" என்று காலுக்கு அடியிலே இருந்து சத்தம் கேட்டது. குனிந்து பார்த்தால் அவன் மடையில் படுத்திருக்கிறான். "என்னப்பா இது?" என்றார். "காலையில் இருந்து இந்த மடையை அடைத்துப் பார்த்தேன் சுவாமி! முடியவில்லை! அதனால் இப்படி குறுக்கே படுத்துவிட்டேன். என்னைத் தாண்டுவதற்குப் பயந்து தண்ணியே தேங்கி நின்றுவிட்டது!" என்றான்.

அவனுடைய குருபக்தியையும் அவனைத் தாண்டுவதற்கு அஞ்சி நிற்கிற தண்ணீர் தேக்கத்தையும் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்களாம். "ஆருணி! எழுந்து வா!" என்று கூப்பிட்டார் குருநாதர். அவன் தண்ணீரை பிளந்து கொண்டு எழுந்து வந்தான். அதனால் அவனுக்கு "உத்தாலகன்" என்று பேர் வந்ததாம். "உத்தாலகன்" என்றால் "தண்ணீரைப் பிளந்தவன்" என்று அர்த்தம்.

அந்த உத்தாலகன் மாதிரி இந்த காலத்து மாணவர்களுக்கும் "குருபக்தி" வேண்டும் என்று சொன்னேன். ஒரு பள்ளிக்கூடத்தில்! உடனே நிறைய மாணவர்கள் எழுந்து நின்றார்கள். "சேர்... நீங்கள் எங்களை இன்னும் சரியாக புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறோம். அன்றைக்காவது ஒருத்தன் அப்படி இருந்தான். இன்றைக்கு ஏகப்பட்ட உத்தாலகர்கள் இருக்கிறோம். எங்கள் வாத்தியார் கட்டளையிட்டால் இப்பவே அதுமாதிரி வயலுக்குப் போய் மடையில் குறுக்கே படுத்துக்கொள்ள இந்த வகுப்பில் உள்ள அத்தனை பேரும் தயாராக இருக்கிறோம்!" என்கிறார்கள்.

"அப்படியா?" என்று கேட்டேன் மிகவும் சந்தோசமாக! ஒருவன் மிகவும் அடக்கமாக எழுந்துகொண்டான். "ஆமாம் சேர்! வகுப்பில் பாடம் கேட்பதைவிட மடையில் படுத்துக் கொள்வது ஒன்றும் கஷ்டமான காரியமாக இருக்காது சேர்!" என்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுவலுவுடையோர் வாழ்க்கையில் ஒளி ஏற்றுவோம்

ஆண்டில் ஒருதினம் மாற்றுவலுவுடையோருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதுவே மார்கழித் திங்கள் மூன்றாம் நாள். உலகில் ஒவ்வொருதுறையும் விசேடமாக அறிவியல் விஞ்ஞானத்துறை எம்மால் கற்பனை பண்ணமுடியாத வேகத்தில் வளர்ந்து செல்கின்றது.

மனிதவளம் சக்தியாகவும் ஆய்வுகளிலும், சாதனைகளிலும் செலவு செய்யப்படுகின்றது. சமூகநலன் பற்றியோ, சமூக வளர்ச்சி பற்றியோ சிந்திக்க வாய்ப்புக்கள் அருகிச்செல்லும் ஒரு யுகத்தையே நாம் காண்கின்றோம். இது ஓர் பெரும் அவல நிலையை உருவாக்கும்.

இன்றைய நிலையில் விபத்துக்கள் நெருக்கடிகள், போசாக்கின்மை, விழிப்புணர்ச்சியின்மை,பாரம்பரியங்களில் இறுக்கமான நம்பிக்கை, ஆபத்தான மருந்து வகைகள், இன்னோரன்ன காரணங்களினால் சமூகத்தில் உடல், உள புலன் பாதிப்புற்றோர் தொகை நாளாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளன. இது பற்றிச் சிந்திக்கவே நேரமில்லாத சமூகத்தையே காண்கின்றோம்.

கேள்விக் குறைபாடுள்ள குழந்தை ஒலியைக் கேட்க முடியாமையால் சூழலோடு தொடர்பற்றதாகவும், தனியான ஒரு உலகத்தில் வாழ்கின்றது. தனது பெற்றோர்களுடனோ, சகோதரர்களுடனோ பேச முடியாது திகைக்கின்றது. பெற்றோர் செய்வதறியாது மூட நம்பிக்கைகளினால் குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்காது காலத்தை கடத்துகின்றனர். இறுதியில் குழந்தையின் கல்வி பாதிக்கப்படுகின்றது.

இதேபோன்று மெல்லக்கற்கும் குழந்தைகள் அண்மைக்காலம் வரை இவர்களுக்கான கல்வி நிலையங்கள் இருந்தாலும் தமது பிள்ளைகளை அத்தகைய நிலையங்களுக்கு அனுப்புவதற்கு பெற்றோர் விரும்புவதில்லை. ஈற்றில் இழப்பு பிள்ளைகளிற்கே. இதேபோன்று தான் மூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளும் இவர்கள் கற்பிக்கப்படமாட்டாதவர்கள். மருத்துவ நிலையத்தில் சேர்த்து விடுவதைத் தவிர வேறு வழியில்லையென நினைத்துப் பெற்றோர் இவர்களை எதிர்காலமே இல்லாதவராக்கி விடுகின்றனர்.

உடல் ஊனம் கல்வி பெறுவதற்கு எவ்வகையிலும் தடையாகாது. சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்குமே தவிர, தடையாக அமையாது. ஆனால் உரிய வழிகாட்டல், மன உறுதி, இலட்சியம் என்பன இருக்குமாயின் இவர்களையும் பயனுள்ள நல்ல எதிர்காலமுள்ள பிள்ளைகளாக மாற்ற முடியும்.

## புதிய அணுகுமுறை அவசியம்

ஓர் மாற்றுவலுவுடையோர் எதிர் காலத்தில் சுதந்திரமாக மற்ற எவரையும் எதிர்பாராது பிறரைப் போன்று ஒரு நிறைவான வாழ்க்கையை நடத்த வழி சமைத்துக் கொடுப்பதையே எதிர்பார்க்கின்றதல்லாது ஒருநாள் உணவையோ, பரிசில்களையோ, பொய் வார்த்தைகளையோ அல்ல.





மேற்கு நாடுகளைப் போன்று ஒரு குழந்தை பிறந்ததுமே குடும்ப ஆலோசகர் மூலம் அந்தக் குழந்தைக்கு ஏதாவது குறைபாடுகள் உண்டா? என்பதைக் கண்டறிய வேண்டும்.

அவ்வாறு கண்டறிவதற்கு வசதியாக இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருப்பது போன்று மருத்துவ நிபுணர்கள், உளவியல் நிபுணர்கள், கல்வித்துறை நிபுணர்கள், சமூக சேவைத்துறையினர் அடங்கிய குழுக்கள் அந்தந்தப் பகுதிகளில் வைத்தியசாலைகளோடு இணைந்ததாகவோ அல்லது விசேடமாக அமைக்கப்பட்ட நிலையங்களிலோ இயங்க வேண்டும்.

இது ஓர் அத்தியாவசியமான சேவை. இந்த நிலையங்களிலே இனங்காணப்படும் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு ஆரம்பத்திலேயே அவர்களுக்கான வைத்திய சிகிச்சையை அளிக்க முடியும்.

## பெற்றோர் கடமை

அடுத்தகட்டமாக வைத்திய சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியாது போகுமிடத்து கல்வி சார்ந்த புனர்வாழ்வு **(Educational Rehabilitation)** அளிக்க முடியும்.

உதாரணமாக விழிப்புலனிழந்த குழந்தையாயின் அதற்கான பாடசாலைக்கோ, செவிப்புலனிழந்த தாயின் அவர்களுக்கான பாடசாலைகள், கல்வி நிலையங்கள் என்பனவற்றுக்கு அனுப்புவதன் மூலம் அவர்களுக்கான கல்வியை அளிக்க முடியும். இதற்கென பெற்றோர்களுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கும், வழிகாட்டலை வழங்குவதற்குமான விசேட சமூகசேவை உத்தியோகத்தர்கள் சகல பகுதிகளுக்கும் நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அதுமட்டுமன்றி இத்துறையில் அவர்கள் அறிவு, ஆற்றல் என்பன பெற்றிருத்தல் வேண்டும்.

## சமூக சேவை உத்தியோகத்தரின் பணி

மேற்கூறிய சமூக சேவை உத்தியோகத்தரின் கடமைகள் பலவகையானதாக அமையும்.பிள்ளைகளின் குறைபாடுகளை இனங்காண்பதிலிருந்து அவர்களின் பிற்கால வாழ்க்கைவரை இவரின் சேவை தொடர வேண்டும்.

உதாரணமாக இக் குழந்தைகள் கல்வி கற்கும் போது பல இடையூறுகளை எதிர்நோக்குவர்.அவற்றையெல்லாம் களைவதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும். அரச, அரசசார்பற்ற ஸ்தாபனங்களிலிருந்து உதவிகளை பெற்றுக்கொடுக்க முயற்சிக்க வேண்டும். விசேடமாக உபகரணங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

கல்வி கற்று முடிந்தவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். அரச சுற்று நிருபமொன்று இவர்களுக்கு மொத்த தொழில் வாய்ப்புக்களில் 6 வீதம் ஒதுக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றது. இதனை அமுல்படுத்துவதில் இவ் அதிகாரிகள் முக்கிய பங்கினை வகிக்கலாம். தனியார் நிறுவனங்களிலும் இதேபோன்று வேலைவாய்ப்புக்களை பெற முயற்சிக்கலாம்.

மேலும் இதுவரை மாற்றுவலுவுடையோருக்கு வழங்கிவரும் மாதாந்த உதவிப்பணம் ரூபா 3 ஆயிரத்தில் இருந்து ரூபா 5 ஆயிரம் ஆக உயர்த்தப்பட்டமை வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

மறுபுறத்தில் சாதாரண கல்வியையோ, உயர்கல்வியையோ பெற முடியாதவர்களும் பலர் இருப்பர்.அவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்களினை அமைத்து உரிய பயிற்சிகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு பயிற்சி முடித்தவர்கள் சுய தொழில்களை தனியாகவோ, கூட்டாகவோ ஆரம்பிக்கத் தேவையான உதவிகளினையும், வழிகாட்டல்களினையும் வழங்க வேண்டும். தேவையான மூலப் பொருட்கள், இயந்திர சாதனங்கள், ஆரம்ப நிதி என்பனவற்றினை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அத்தோடு அவ்வாறான நிலையங்களில் உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்வதற்கான ஒழுங்குகளையும் செய்து கொடுத்தல் வேண்டும். அத்தோடு பிற அரச சலுகைகளையும் உதாரணமாக சிறுவர்கள் தங்கள் பெற்றோரின் ஓய்வூதியத்தை பெற்றோர் இறந்தபின் தங்கள் காலம்வரை பெறக் கூடிய சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. ஆனால் பலருக்கு இது பற்றி தெரிவதில்லை. இங்கும் சமூக சேவை உத்தியோகத்தரே உதவ வேண்டும்.

இறுதியாக இவர்களை சமூகத்தோடு ஒன்றிணைக்கவும் முயலவேண்டும். **(Social Integration)** தனிமையில் வாழ்ந்து தாங்கள் ஓர் இரண்டாந்தரப் பிரஜைகளே என்ற எண்ணத்தை உருவாகவிடாது ஏனையோரைப் போன்று சரிசமமாக, சுதந்திரமாக இன்னும் சிறப்பாக வாழ முடியுமென்பதை நிரூபிக்க உதவ வேண்டும்.

மேலோட்டமாக நோக்குவோமாயின் அரசு இவர்களின் வாழ்க்கையில் ஒளியை ஏற்றுவதற்கான சகல முயற்சிகளினையும் எடுக்கவேண்டும். அதற்கான உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு அரசாங்க அதிபர் பிரதேசங்களிலும் நியமிக்கப்பட வேண்டும்.

இவ் உத்தியோகத்தர்கள் தம்மிடையே தொடர்புகளை ஏற்படுத்தி இவர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்வாழ்வு நடவடிக்கையினை ஒன்றிணைந்து அரச அதிபர் மற்றும் உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பினையும், வழிகாட்டலினையும் ஆசிகளினையும் பெற்று இவர்களின் வாழ்வில் ஓர் புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்க முயற்சிக்க வேண்டும்.

இப் புதிய அணுகுமுறையைக் கையாள்வதன் மூலம் நிச்சயம் மாற்றுவலுவுடையோரின் வாழ்வுவளம் பெறும். இச்சேவையில் ஈடுபடும் ஒவ்வொருவரும் நிச்சயமாக ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்படுவர்.

**க. கோபாலகிருஷ்ணன்,**
**செயலாளர்,**
**வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்- அறொட்**







**யாழ். வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அதிபர் த.செல்வக்குமார் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், சிறப்பு விருந்தினராக மருதங்கேணி பதில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

**(படங்கள்: பொற்பதி செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின் வெளிநாட்டுக் குப்பைக் கிடங்காக இலங்கை

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு கடும் விமர்சனம்
## மகிந்த சிந்தனை; கோட்டாவின் தலையீட்டுக்குப் பாராட்டுப்பத்திரம்

(கொழும்பு)

**2015 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் வெளிநாட்டு குப்பை கூழங்கள் கொண்டு வரப்பட்டு, குப்பைகளைக் கொட்டும் கிடங்காக இலங்கை மாறியது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு கடுமையாக விமர்சித்தது. அதேவேளை மகிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட சுற்றாடல் சார்ந்த திட்டங்களுக்கும் அப்போது பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குப் பாராட்டுப் பத்திரம் வாசித்தது.**

"புதிய சுவாசம்" என்று தலைப்பிட்டு ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்த அறிக்கையில்,

உலகில் கண்கவர் வனப்புமிக்க ஒரு நாடு என்ற வகையிலேயே ஆதிகாலம் முதல் இலங்கை ஏனையோரின் பாராட்டையும் கவனத்தையும் பெற்றுள்ளது. இதற்கு எமது நாட்டின் அமைவிடம் மாத்திரமன்றி ஒரு தேசமாக நாம் பெற்றுள்ள உயரிய பெறுமானங்களும் காரணமாகும்.

எனினும் காலப்போக்கில் இலங்கையரின் தனித்துவ அடையாளத்திற்கு சவாலாக அமையக் கூடிய பல்வேறு பிரச்சினைகளை எமது நாடு எதிர்நோக்க நேர்ந்தது. சுற்றாடலுக்கு எதிரான சமூகமொன்று உருவாகி வந்தமையே இதற்கான முதன்மைக் காரணமாக அமைந்தது.

எமது மூதாதையர் இயற்கையுடன் மிக நெருங்கிய பிணைப்பினைக் கொண்டிருந்தனர். அவர்கள் மரம், செடி, கொடிகள், ஆறுகள், நீரோடைகளை மிகவும் நேசித்தனர். அத்தகைய பண்டைய மரபுகள் எம்மைவிட்டு நீங்கிச் சென்றமையால் எம்மீது நம்பிக்கை கொண்டிருந்த இயற்கைக்கு மனிதர்கள் துரோகியானதன் எதிர் விளைவுகளை எமது கண்ணெதிரிலேயே நாம் காணக் கிடைத்தது.

அதிலிருந்து மீண்டு சிறிதளவேனும் நிம்மதியாக சுவாசிக்கக்கூடிய சூழல் மகிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக எமக்குக் கிடைக்கப்பெற்றது.

இதன்போது நகர அபிவிருத்தி பற்றிய விடயம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டு உலகத்தரம் வாய்ந்த நகரத் திட்டமிடல், சுற்றாடல் முகாமைத்துவம் ஆகியவற்றை நாம் அனுபவிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

அப்போதைய பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய கோட்டாபய ராஜபக்ஷவின் நேரடி தலையீடே இதற்குக் காரணமாகும். நகரங்கள் துரிதமாக தூய்மைப்படுத்தப்பட்டதுடன் புறநகர் சதுப்பு நிலங்கள் அழகிய நீர்த் தடாகங்களாக மாற்றம் பெற்றன.

காடுமண்டிக் கிடந்த புறநகர் பிரதேசங்கள் கண்கவர் பிரதேசங்களாகியதுடன் உடற்பயிற்சிக்கான நடை பாதைகளும் நகர மக்களுக்கு கிடைக்கப்பெற்றன. இணையத்தின் ஊடாகவும் தொலைக்காட்சியினூடாகவும் நாம் கண்ட பெரும்பாலான வனப்புமிக்க வெளிநாட்டு நகரச் சூழலை எம்மால் நேரடியாகவே காண முடிந்தது. துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்த கொழும்பு நகரம் ஆசியாவில் துரிதமாக அபிவிருத்தியடையும் சுந்தர நகரமாக மாறியது. புறநகர் பிரதேசங்களும் இதனுடன் இணைந்ததாக அழகிய சுற்றுச் சூழலாக மாற்றம் பெற்றன. நனவாகிக் கொண்டிருந்த இந்தக் கனவு 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மீண்டும் தடைப்பட்டு போனது. வழக்கம்போல அன்று முதல் மீண்டும் எமது நாட்டில் பெருந்தெருக்கள் குப்பைகளால் நிரம்பத் தொடங்கின.

அமைச்சர்களின் தேவைக்கமைய வீதி அமைப்புக்கள் மாற்றப்பட்டன, நகரங்கள் அசுத்தமாகின, வெளிநாட்டு குப்பை கூழங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன. குப்பைகளைக் கொட்டும் கிடங்காக இலங்கை மாறியது. இச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களால் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பொறுப்புக்கூற வேண்டிய அனைவரும் அமைதியாக்கப்பட்டனர். அவற்றின் பெறுபேறாக வரலாற்றிலேயே மிக மோசமான, கொடிய சுற்றாடல் துன்பியல் நிகழ்வாக குப்பை மேடு சரிந்து விழுந்து பெருமளவு உயிர்களும் உடைமைகளும் காவு கொள்ளப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனம் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இவையனைத்தும் கடந்தகால வரலாற்றுச் சம்பவமாக முற்றுப் பெற்றன. தற்போது நாடு தயாராகி வருகின்றது. நாளுக்கு நாள் ஒவ்வொரு கணமும் நாடு தூய்மையடைந்து வருகின்றது. அங்கு மிங்கும் குவிந்து கிடந்த குப்பைகள் அகற்றப்படுகின்றன.

மீண்டும் சுற்றாடலுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான பிணைப்பு உறுதியடைகின்றது. முறையின்றி வெளியேற்றப்பட்ட கழிவுகள் முறைமைப் படுத்தப்படுகின்றன. மக்கள் இயற்கை, சுகாதார பாதுகாப்பு பற்றிய எதிர்பார்ப்புடன் உள்ளனர். அரச அதிகாரிகள், இளைஞர், யுவதிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதியின் சூழல் நேய வேலைத்திட்டத்தில் தன்னார்வத்துடன் இணைந்துள்ளனர். இத்தகைய தேசமும் சமூகமுமே எமக்குத் தேவை. தூய்மையான தேசம், சுகாதார, பாதுகாப்பான சுற்றாடல் பற்றிய எமது எதிர்பார்ப்பு தினம் தினம் நிறைவேறி வருகின்றது.

உங்களது அந்தக் கனவு யதார்த்தமாகி வருவதையே இப்போது நீங்கள் அவதானிக்கின்றீர்கள். இவை எமது நாட்டை மீண்டும் அழகிய வனப்புமிக்க நிம்மதியாக சுவாசிக்கக்கூடிய நாடாக மாற்றும் முயற்சிகளாகும்.

"என்னை நீங்கள் பாதுகாத்தால், நான் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பேன்" என்பதே இதனூடாக சுற்றாடலினால் எமக்கு விடுக்கப்படும் அமைதியான முக்கிய செய்தியாகும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## யானையின் உடல் மீட்பு



(கணமல்வில)

கணமல்வில-உஸ்கல-தஹதாமார பிரதேசத்திலுள்ள தனியார் ஒருவரின் காணியிலிருந்து நேற்றுக் காலை யானையின் உடல் மீட்கப்பட்டது. (இ-7)

## "லன்ச் சீட்" உற்பத்தியாளர்களுக்கு புதிய சட்டம்

(கொழும்பு)

நுகர்வோர் விவகார அதிகார சபை "லன்ச் சீட்" உற்பத்தியாளர்களுக்கு புதிய சட்டங்களை அறிமுகம் செய்தது.

அதில் லன்ச் சீட்கள் பொதி செய்யப்பட்டு வரும் பைகளுக்குள் காட்சிப்படுத்தும் தாள்களில் காணப்பட வேண்டிய விடயங்களைப் பட்டியலிட்டது.

இந்தத் தாளில் உள்ளடங்க வேண்டிய தகவல்களை மூன்று மொழிகளிலும் காட்சிப்படுத்துமாறும் அதிகார சபை நிபந்தனை விதித்தது.

இந்தப் புதிய சட்டம் எதிர்வரும் 2020 ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்தது. (இ-7)









குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் ஒளிவிழா கடந்த சனிக்கிழமை குருநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக குழந்தை யேசு ஆலய உதவிப் பங்குத்தந்தை அருட்பணி ஜோ.ராஜசேகர், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் கிரிதரன் ஜெகதாரணி, டாக்டர் அ.ராகவோ ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் சிறார்களின் கண்காட்சியும் இடம்பெற்றது.

(படங்கள்:- குருநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் புதியநோக்கை உலகிற்கு வெளிப்படுத்திய ஜனாதிபதியின் இந்திய விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே வரலாற்று காலம் முதல் கட்டியெழுப்பப்பட்டுள்ள தொடர்புகளை மென்மேலும் மேம்படுத்திய அரசமுறைப் பயணமாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இந்திய விஜயம் வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. அத்துடன் இவ்விரு நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வைப்பதற்கான முன்னோடி விஜயமாகவும் இது அமைந்துள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசத்தைத் தடுப்பதற்காக எதிர்த்தரப்புக்கள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்த அதேவேளை, அதன் ஒரு உபாயமாக அவரது குடியுரிமை பற்றிய மிக மோசமான, முறையற்ற பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. கோட்டாபய ராஜபக்ஷ மீது இந்தியாவிற்கு வெறுப்பினை ஏற்படுத்துவதே அதன் மறைமுக நோக்கமாக அமைந்தது. ஆயினும் அதன் விளைவு அவ்வாறானதாக அமையவில்லை.

உண்மையே இறுதியில் வெற்றிபெறும். அதற்கமைய அவர் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் முதலாவது அரசமுறை விஜயமொன்றினை மேற்கொள்வதற்கான அழைப்பு பாரத தேசத்திலிருந்தே கிடைக்கப்பெற்றது. உண்மையிலேயே அதனை தேசத் துரோக முகாமின் ஒரு பாரிய தோல்வியாகவே நாம் காண்கின்றோம். இலங்கையின் சமூக, கலாசார, அரசியல் உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் இந்தியாவின் தாக்கங்கள் காணப்படுவதனை எம்மால் மறுக்க முடியாது.

சுயாதீனமான இறைமைமிக்க இரு தேசங்கள் என்ற வகையில் அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியில் இரு நாடுகளுக்குமிடையே காலத்திற்கு காலம் ஏதேனும் நிகழ்வுகளை காரணமாகக்கொண்டு இடைவெளிகள் ஏற்பட்ட போதிலும் எம் இரு நாடுகளின் சகோதர பிணைப்பு மிகவும் உறுதியாகவே காணப்படுகின்றது. இதனாலேயே அரசியல் சமூக ஆய்வாளர்கள் இலங்கையின் மூத்த சகோதரன் என இந்தியாவை குறிப்பிடுவது வழக்கமாகக் காணப்படுகின்றது.

ராஜபக்ஷ ஆட்சிக் காலங்களில் இலங்கை மீது இந்தியாவிற்கு வெறுப்பினை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பவாத அரசியல் சக்திகளும் சில அரச சார்பற்ற நிறுவனங்களும் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டமை எமக்கு ஞாபகமிருக்கின்றது.

ஆயினும் அவ்வனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்கள் தோல்வி அடைந்ததோடு, நாடு வெற்றி பெற்றது. கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலமும் இந்த யதார்த்தத்தையே எடுத்துக்காட்டுகின்றது. கோட்டாபய ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின்போது இந்திய அரசாங்கமும் மக்களும் வெளிப்படுத்திய அன்பும் கௌரவமும் மகத்தானது.

இந்திராகாந்தி விமான நிலையத்தில் இலங்கை அரச தலைவரின் அபிமானமும் ஆளுமையும் எடுத்துக்காட்டத்தக்க வகையில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்திய பொதுப் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி வி.கே.சிங் உள்ளிட்ட குழுவினரால் கோட்டாபய ராஜபக்ஷ வெகு விமரிசையாக வரவேற்கப்பட்டார். இதன்போது இந்திய பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இலங்கை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ விஜயத்தின் இரண்டாம் நாளான கடந்த 29ஆம் திகதி இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கிடையிலான சந்திப்பு டில்லியில் இடம்பெற்றது. அயல் நாடு என்ற வகையில் இலங்கை நீண்டகால குறிக்கோளுடன் முன்னோக்கி செல்வதற்கு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதியிடம் நம்பிக்கை தெரிவித்தார்.

பொருளாதார ஒத்துழைப்புக்களை நோக்காகக்கொண்ட பரஸ்பர நன்மைகளைப் பெறக்கூடிய புதிய அணுகு முறைகளினூடாக இலங்கை - இந்திய உறவுகளை முன்னெடுத்துச் செல்லுதல் இந்திய அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகுமென இதன்போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

மேலும் இரு நாடுகளினதும் வர்த்தக தொடர்புகள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்ட இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், தரமான உயர் நிர்வாக முறைமை காணப்படுதல், வெளிநாட்டு முதலீடுகளை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கு வழி சமைக்கும் பிரதான காரணியாகுமெனத் தெரிவித்தார். அன்றைய தினம் மாலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கான விசேட விருந்துபசார நிகழ்வு ராஸ்டிரபதி பவனில் இடம்பெற்றது. இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்துடனான சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய இதில் கலந்துகொண்டார்.

அரச தலைவர்களுக்கு வழங்கப்படும் உயர் கௌரவத்தை வழங்கி இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் இலங்கை ஜனாதிபதியை வரவேற்பதற்கு இந்திய ஜனாதிபதியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது முதலாவது வெளிநாட்டு விஜயமாக இந்தியாவிற்கு வருகை தந்தமையை இந்திய ஜனாதிபதி பெரிதும் பாராட்டியதுடன், இந்த முன்னுரிமை தெற்காசிய வலயத்தின் எதிர்கால பயணத்திற்கும் ஒத்துழைப்பிற்கும் சக்தியாக அமையுமென தாம் நம்புவதாகவும் தெரிவித்தார். வரலாற்றுக்காலம் முதல் இரு நாடுகளுக்குமிடையே நிலவிவரும் நட்புறவை மேலும் பலப்படுத்தும் வகையில் தமது அரசாங்கம் செயற்படுமென இந்திய ஜனாதிபதியிடம் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இருநாட்டு மக்களினதும் வாழ்க்கையை சுபீட்சமாக்குவதற்கான உயர் பொருளாதார திட்டங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடினர். இந்திய அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் மிக முக்கியமான இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பு கடந்த 29ஆம் திகதி நண்பகல் ஐதராபாத் மாளிகையில் இடம்பெற்றது. இந்திய பிரதமரால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. அரச தலைவர்கள் இருவருக்குமிடையிலான சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்தன.

இதன்போது இந்திய பிரதமரால் ஜனாதிபதிக்கு விடுக்கப்பட்ட அழைப்பு தொடர்பில் ஜனாதிபதி தனது நன்றிகளைத் தெரிவித்ததுடன், ஜனாதிபதித்தேர்தல் மேடையில் கோட்டாபய ராஜபக்ஷவிடம் காணப்பட்ட ஒழுக்கம் ஒட்டுமொத்த உலக அரசியலுக்கும் முன்னுதாரணமாகும் எனவும் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவதாகவும் பிரதமர் மோடி தெரிவித்தார்.

வேலைத்திட்டத்திற்கு மேலும் 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குவதற்கும் இந்திய பிரதமர் தீர்மானித்தார்.

நீண்டகாலமாக நிலவிவரும் இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் இரு நாடுகளும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்படுகின்றமை தொடர்பாக அரச தலைவர்கள் மகிழ்ச்சி தெரிவித்ததோடு, தற்போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து இந்திய மீன்பிடிப் படகுகளையும் விடுவிப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்தார்.

அயல் நாடு என்ற வகையில் தமது நாட்டின் மீது இந்தியா கொண்டுள்ள அக்கறை இரு நாடுகளினதும் எதிர்காலத்திற்கு நன்மையாக அமையுமெனவும் இரு நாட்டு பாதுகாப்பிற்கும் முன்னுரிமையளித்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் அரச தலைவர்கள் விரிவாக கலந்துரையாடினர்.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால நட்புறவு, பொருளாதார, அரசியல் மற்றும் சமூக தொடர்புகளின் மேம்பாட்டிற்காக பொறுப்புடன் செயற்படவும் அரச தலைவர்கள் இதன்போது உறுதிபூண்டனர். அதனைத் தொடர்ந்து இரு நாட்டு அரச தலைவர்கள் ஊடக சந்திப்பொன்றை நடத்தினர்.

இதன்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்திய அரசாங்கமும் அரச தலைவர்களும் மக்களும் தன் மீது செலுத்திய அன்பிற்கும் அளித்த கௌரவத்திற்கும் நன்றி தெரிவித்தார். அத்தோடு இந்தியப் பிரதமரை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதமரால் வழங்கப்பட்ட விசேட மதிய உணவு விருந்தில் ஜனாதிபதி கலந்து கொண்டதுடன், ஐதராபாத் மாளிகையில் உள்ள நினைவுக் குறிப்பேட்டிலும் ஜனாதிபதி தமது கையெழுத்தைப் பதிவு செய்தார்.

## இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப 68 ஆயிரம் மில்லியன் ரூபாய் இலகு கடன் திட்டம்

## கோட்டாபயவிடம் மோடி இணக்கம்



இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான விசேட இலகுகடன் திட்டத்தின் கீழ் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை அதாவது ரூபா 68 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை இலங்கைக்கு வழங்குவதற்கு இலங்கை அரச தலைவரிடம் இந்திய பிரதமர் இணக்கம் தெரிவித்தார்.

அது இலங்கையின் பொருளாதாரத்தை நம்பிக்கைக்குரியதாக கட்டியெழுப்புவதற்காக அயல் நாடு என்ற வகையில் இந்தியாவின் நீண்டகால சகோதரத்துவத்தை எடுத்துக்காட்டிய விசேட சந்தர்ப்பமாகும்.

அத்தோடு நாடு எதிர்நோக்கியிருக்கும் தேசிய பாதுகாப்பு பற்றிய பிரச்சினை தொடர்பாகவும் இரு நாட்டு தலைவர்களுக்குமிடையே விசேட கருத்துப் பரிமாற்றம் இடம் பெற்றது.

நீண்ட கலந்துரையாடலின் பின்னர் இலங்கை அரசாங்கத்தின் தேசிய பாதுகாப்பை இலக்காகக்கொண்ட

ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தின்போது மகாத்மா காந்தியின் நினைவிடத்திலும் மலரஞ்சலி செலுத்தினார். இரு தினங்களாக இரு நாடுகளினதும் தனித்துவமான வரலாற்று ரீதியான நட்புறவினை உலகத்தவருக்கு எடுத்துக்காட்டி இந்தியாவிற்கான தனது அரசமுறைப் பயணத்தை நிறைவு செய்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிற்கும் வெளிநாட்டு தொடர்புகளுக்கும் மேலுமொரு புதிய பாதையை ஆரம்பித்து வைத்தார்.

தேசிய கோட்பாடுகள் மற்றும் தனித்துவத்தை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கமைய தமது வெளிநாட்டு விஜயத்தை நிறைவு செய்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையரின் மனங்களில் தேசப்பற்று பற்றிய எண்ணக்கருவினை ஆழமாக வேரூன்றச் செய்தே பண்டாரநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கினார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

ஒக்டோபர் 2019 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிக்கும் சமூகத்தை உருவாக்க "சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்" எனும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு கச்சாய் எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே வாசிப்பை ஊக்குவிக்கவும் நூலகத்தை தொடர்ந்து பயன்படுத்த வைக்கவும் பல போட்டிகள் நடத்தப்பட்டன

அந்தப் போட்டி முடிவுகள்:

**பிரிவு 1 தரம் 4 ,5**

**வாசிப்பு- தமிழ்**

1) முதலாமிடம் சி.ரிவானிகா கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

2) இரண்டாமிடம் ச.சஸ்வின் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

3) மூன்றாமிடம் ர.நிரயுந்தா போக்கட்டி அ.த.க.பாடசாலை

பத்து புத்தகங்கள் வாசித்து போட்டியில் பங்குபற்றல்

1) முதலாமிடம் ச.லோனிசா கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

2) இரண்டாமிடம் ச.நிதாயினி கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

3) மூன்றாமிடம் சி.ரிவானிகா கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

**பிரிவு 2 தரம் 6,7 சிறுவர் பாடல்கள்**

1) முதலாமிடம் ஜெ.லக்ஷிகா கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

2) இரண்டாமிடம் சி.உஷாந்தினி கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

3) மூன்றாமிடம் ந.மீதுஷா கச்சாய் மகா வித்தியாலயம்

**பிரிவு 3 தரம் 8,9**

**பொது அறிவு**

1) முதலாமிடம் ச.சேனுஜா விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

2) இரண்டாமிடம் பு.காவியா கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

3) மூன்றாமிடம் ச.ஜெனார்த்தனி கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

**பிரிவு 4 தரம் 10, 11**

**கட்டுரைப் போட்டி**

1) முதலாம் இடம் கு.துஸ்யந்தினி கச்சாய் மகா வித்தியாலயம்

2) இரண்டாம் இடம் இ.நிலானிகா கச்சாய் மகா வித்தியாலயம்

3) மூன்றாமிடம் செ.யட்சனா விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

**பிரிவு 5 தரம் 12, 13**

**சிறுகதை**

1) முதலாமிடம் ச.கவிதா கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

2) இரண்டாமிடம் ஜெ.அனுசியா கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

3) மூன்றாமிடம் நா.பிரியா கச்சாய் மகா வித்தியாலயம்

**சுவரொட்டி போட்டி**

**பிரிவு 1 தரம் 1,2,3**

1) முதலாமிடம் அ.பவிலுக்சா கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

2) இரண்டாமிடம் பி.கல்பனா அல்லாரை அ.த.க. பாடசாலை

3) மூன்றாமிடம் வி.பவன்யா கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

**பிரிவு 2 தரம் 4,5**

1) முதலாமிடம் நா.திரேகா போக்கட்டி அ.த.க. பாடசாலை

2) இரண்டாமிடம் த.லோனிசா கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை

3) மூன்றாமிடம் ஞா.அஜந்தா கெற்பேலி அ.த.க. பாடசாலை

**பிரிவு 3 தரம் 6,7,8**

1) முதலாமிடம் த.கனுஸ்ரன் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

2) இரண்டாமிடம் ஈ.நிகேஸ் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

3) இருவர் மூன்றாமிடம் பு.காவியா கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

3) சி.சிந்துஜன் கச்சாய் மகா வித்தியாலயம்

**பிரிவு 4 தரம் 9,10,11**

1) முதலாமிடம் சு.நிதர்சன் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

2) இரண்டாமிடம் இ.நிதர்சன் கச்சாய் மகா வித்தியாலயம்

3) மூன்றாம் இடம் செ.தனுஸ்குமார் கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்

**வர்ணம் தீட்டுதல்**

**கீழ்ப்பிரிவு**

1) முதலாமிடம் மு.சகான் ஞானசூரியன் முன்பள்ளி

2) இரண்டாமிடம் நி.தம்சினி அன்னை திரேசா முன்பள்ளி

3) இருவர் மூன்றாமிடம் அ.கம்சினி கலைமகள் முன்பள்ளி

3) டிலக்சன் கொடிகாமம் மத்தி முன்பள்ளி

**வாசகர்களுக்கான திறந்த கட்டுரை போட்டி**

1) முதலாம் இடம் ப.கீதாஞ்சலி

2) இரண்டாம் இடம் சு.தமிழரசி. (இ-7)

# ஈழத் தமிழர்களுக்கு தமிழீழம் தீர்வாகாது

## தமிழக காங். தலைவர் கூறுகிறார்



(சென்னை)

ஈழத்தமிழர்களுக்கு தமிழீழம் தீர்வாக இருக்க முடியாது என தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக இந்தியாவிற்கு சென்றிருந்தார்.

இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள கே.எஸ். அழகிரி "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் கோட்டாபய ராஜபக்ஷவின் அணுகு முறையால் எந்த பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியதன் பொறுப்பு இந்திய அரசுக்கு இருப்பதாக கருதுகிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் இல்லாமல் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளமையே இந்த அச்சத்திற்கு காரணமாகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு முழுமையான அதிகாரப்பகிர்வு என்ற ஒற்றை இலட்சியம் அவர்களின் நோக்கமாக இருக்கிறது. அதை நோக்கியே அவர்கள் பயணிக்கின்றார்கள்.

இந்தியாவுக்குள் தமிழகம் இருப்பதைப்போல அதிக அதிகாரங்களுடன் ஒரு மாநிலம் அமைவதே இலங்கை தமிழர்களுக்கு நிரந்தர தீர்வாக இருக்க முடியும். அதனையே தமிழர்களும் விரும்புகின்றனர். மாறாக தமிழீழம் என்பது தீர்வாக இருக்க முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1905

### வனஸ்பதி




### வைஷ்ணவி




### ரஜீவன்




### திலக்ஷன்




### நவலோஜிதா




### றோகித்தா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கோட்டாபயவின் ஆட்சி பொற்காலம்

# வரலாற்றுத் தவறுகளை தமிழர்கள் மீண்டும் செய்யக்கூடாது - கருணா

(அம்பாறை)

வரலாற்றுத் தவறுகளை மீண்டும் தமிழ் மக்கள் செய்யக்கூடாதென தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். அத்துடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி தமிழர்களுக்குக் கிடைத்த பொற்காலமெனவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



"இலங்கை அரசியல் வரலாற்றில் முஸ்லிம்கள் இல்லாத அமைச்சரவையை அமைத்தமையால் முஸ்லிம் அரசியல்வாதிகள் அடங்கிப்போயுள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலில் தமிழ் மக்களைச் சிங்கள மக்கள் காப்பாற்றி விட்டனர். மேலும் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியின் பின்னர் தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டனர் என்றே சொல்ல வேண்டும். இது தமிழர்களுக்குக் கிடைத்த பொற்காலம் ஆகும்.

மகிந்த ராஜபக்ஷ ஒரு தமிழினப் பற்றாளர். எனவே எதிர்வருகின்ற வாய்ப்புக்களை தவறவிட்டு வரலாற்றுத் தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது. இது நம்மை பின்னோக்கி நகர்த்துமெனக் கூற விரும்புகின்றேன்.

மேலும் திருமலை, அம்பாறை மக்களுக்கு அரசியல் தெளிவு வேண்டும். பிள்ளையான் முதலமைச்சராக இருந்தபோது தமிழர்களுக்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது. எனவே இவைகளைக் கருத்திற்கொண்டு தமிழ் மக்கள் அனைவரும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, அனைத்து இடங்களிலும் கால்பதித்து வருகின்ற பொதுத்தேர்தலில் களமிறங்கி முயற்சி செய்தால் இரண்டு ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன்மூலம் அம்பாறைக்கு ஒரு தமிழ் அமைச்சர் கிடைக்க வாய்ப்புள்ளது. அப்போது தமிழர்களின் அபிவிருத்தியும் எமது கையில் அதிகாரமும் கிடைக்கும்.

இந்த நோக்கத்திற்காகவே சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவர் பதவியை துறந்து. மகிந்தவிடம் கூறிவிட்டு வெளியேறினேன். அப்போதுதான் தமிழ் மக்களுக்கான பேரம் பேசும் சக்தியாக மாறமுடியும் என்ற நோக்கம் மாத்திரமே என்னிடம் உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கழிவு நீர் வெளியேறுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு



(கரணவாய்)

கரவெட்டி இராஜா கிராமப் பகுதியில் கழிவு நீர்த் தொட்டி நிரம்பி வழிந்து பெரும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ள நிலையில் இது குறித்து அதிகாரிகள் எவரும் இதுவரை கவனம் செலுத்தவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டினர்.

கரவெட்டி மேற்கு, இராஜா கிராமம் பகுதியில் கழிவு நீரினை தேக்கி வைப்பதற்காக தொட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அத்தொட்டி நிரம்பிய நிலையில் கழிவு நீர் வெளியேறி வீதியில் ஓடியவாறு காணப்படுகின்றது. இதனால் அப்பகுதி பெரும் சுகாதாரக் சீர்கேடான நிலையில் காணப்படுகின்றது.

அக் கிராமத்தில் சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணிப் பெண்கள் வசித்து வருகின்ற நிலையில் கழிவு நீர் தேங்கிச் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளமையை அதிகாரிகள் எவரும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டினர்.(இ-60)


# தந்தைக்கு அஞ்சலி செலுத்திவிட்டு பரீட்சை எழுதச் சென்ற தனயன்!

(திருகோணமலை)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமானது.

இந் நிலையில் திருகோணமலை - மஹதிவுல்வெவ பகுதியில் மாணவன் ஒருவர் தனது தந்தையின் சடலத்திற்கு அஞ்சலி செலுத்திய பின்னர் பரீட்சை எழுத சென்ற சோக சம்பவமொன்று பதிவாகியுள்ளது.





நான்கு பிள்ளைகளின் தந்தையான டபிள்யூ.டீ.சமிந்த லசந்த (வயது - 45) என்பவர் புற்று நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் மஹறகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

சமிந்த லசந்தவின் சடலம் அவரது வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டு நேற்று அடக்கம் செய்யப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் உயிரிழந்த நபரின் மகனான சுபுன் தனஞ்ச பரீட்சைக்குச் செல்வதற்கு முன்னர் தந்தையின் சடலத்துக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி பரீட்சை எழுதுவதற்காக மஹதி வுல்வெவ சிங்கள மகா வித்தியாலயத்திற்குச் சென்றார். (இ-7)

# பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஏழு பேருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஏழு பேர், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளாக பதவி உயர்த்தப்பட்டனர்.

ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப அதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்த ஏழு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு குறித்த பதவியுயர்வு வழங்குவதற்கு பொலிஸ் ஆணைக் குழு ஒப்புதல் அளித்ததாக பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்தது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 110 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 120 | 120 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 320 | 380 | 280 | 160 | 250 |
| தக்காளி | 140 | 120 | 120 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 130 | 100 | 70 | 80 |
| கோவா | 100 | 100 | 120 | 80 | 120 |
| கரட் | 300 | 260 | 280 | 210 | 300 |
| பூசணி | 60 | 60 | 50 | 70 | 80 |
| புடோல் | 80 | 80 | 50 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 140 | 120 | 200 |
| பாகற்காய் | 200 | 180 | 140 | 140 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 70 | 140 |
| பயற்றங்காய் | 200 | 140 | 140 | 140 | 120 |
| லீக்ஸ் | 250 | 220 | 260 | 240 | 320 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 60 | 200 |
| கறிமிளகாய் | 260 | 280 | 260 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 400 | 700 | 450 | — | — |
| போஞ்சி | 140 | 120 | 120 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 80 | 60 | 100 |
| கீரை-1பிடி | 50 | 45 | 40 | 50 | 60 |
| தேசிக்காய் | 100 | 160 | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 35 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | 400 | 250 | 210 | 250 |
| வெங்காயப்பூ | — | — | 400 | — | — |
| முள்ளங்கி | 150 | — | 100 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | 60 | 160 | 60 |



டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு பெருக்கம் மற்றும் நோய் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் வல்வெட்டித்துறை பொலிஸார், பொதுமக்கள், இராணுவத்தினர் மற்றும் நகர சபை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர். (படங்கள்:- மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்ல மனம் வாழ்க



"சம்பளப் பணத்தைப் பங்கீடு செய்து விட்டாயா?" என்றான் தாமோதரன்.

"ஆமாம் நீங்கள் கொண்டு வந்து கொடுத்த இலட்சம் ரூபாவில் பங்கீடு செய்தது போக 80,000 ரூபாய் மீதி இருக்கிறது. இதை எங்கே முதலீடு செய்யலாம்?" என்றாள் வாணி.

தாமோதரன் சிரித்தான், மனைவி விளையாட்டாகப் பேசுகிறாள் என்பதை உணர்ந்ததால் கல்யாணம் ஆன புதிதில் இதே கேள்வியை எகத்தாளமாகக் கேட்டு அவன் மனதைப் புண் படுத்தியவள்தான் வாணி. இன்று பத்து வருடக் குடும்ப வாழ்க்கையில் தாமோதரனையும் வாழ்க்கையின் உண்மைகளையும் புரிந்து கொண்டபின் அவள் மனநிலை கொஞ்சம் கொஞ்சமாக மாறி விட்டது.

"கலாவுக்குப் பள்ளிக்கட்டணம் கட்ட வேண்டும் என்று சொன்னாயே?"

"கடைசித் திகதியை நீங்கள் மறக்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்".

"கவலைப்படாதே! பணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டேன்"

"நீங்கள் பணத்துக்கு ஏற்பாடு செய்திருப்பீர்கள் என்றும் எனக்குத் தெரியும். பணத்தை என்னிடம் கொடுங்கள். இன்றே பள்ளிக்குப் போய்க் கட்டி விடுகிறேன். கையில் இருந்தால் செலவாகி விடும்".

"இன்றுதான் பணம் கைக்கு வரும். என் கைக்கு வந்தவுடன் உன் கைக்கு மாற்றி விடுகிறேன். பணத்தைப் பாதுகாப்பதில் நீதான் கைகாரியாயிற்றே!"

"நேற்று தொலைக்காட்சியில் "கை கை மலர்க்கை" என்று ஒரு பழைய பாட்டு போட்டார்கள். பாடல் முழுவதும் "கை" "கை" என்று வரும். அந்தப் பாட்டை எழுதியது நீங்கள் தானா?".

"ஆமாம் என்று சொல்லி விடுவேன். அப்புறம் அந்தப் பாட்டுக்கு வந்த பணத்தை என்ன செய்தீர்கள் என்று கேட்பாய்! எதற்கு வம்பு? அந்தப் பாட்டை எழுதிய பெருமை வாலிக்கே இருக்கட்டும்!"

மாலையில் தாமோதரன் அலுவலகத்திலிருந்து வந்ததுமே "பணம் கைக்கு வந்ததா?" என்று கேட்கவில்லை வாணி. அவன் சாப்பிட்டு முடிக்கும் வரையிலும் கூடக் கேட்கவில்லை.

சாப்பிட்டு முடித்ததும், அவர்கள் பெண் கலா திடீரென்று நினைவு வந்தவளாக, "அப்பா! எங்கள் பள்ளியில் உல்லாசப் பயணம் போகிறோம். ஐந்தாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமாம். ஆனால் போக வேண்டும் என்று கட்டாயம் இல்லை" என்றாள்.

"கட்டாயம் இல்லையாம்! நம் பொருளாதார நிலையை உணர்ந்து பேசுகிறாள் பாருங்கள் உங்கள் பெண்" என்றாள் வாணி.

"பொதுவாகக் குழந்தைகளைக் குறை சொல்லும்போதுதான் கணவனோ மனைவியோ "உன் பிள்ளை" , "உன் பெண்" என்று சொல்வார்கள். நீ நம் குழந்தையைப் புகழும்போதே "உங்கள் பெண்" என்கிறாயே! உனக்குப் பெரிய மனது" என்றான் தாமோதரன்.

"நான் இப்படிச் சொல்லாவிட்டால் எனக்குப் பெரிய மனது என்று நீங்கள் ஒப்புக்கொண்டிருக்க மாட்டீர்களே!" என்றாள் வாணி. "அது இருக்கட்டும் கட்டாயம் இல்லை என்றால் கலா உல்லாசப் பயணம் போக வேண்டாம் இல்லையா?"

தாமோதரன் சற்று நேரம் மௌனமாக இருந்து'விட்டு "இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நாம் மகாவலிபுரம் போகலாம்" என்றான்.

"அய்யா ஜாலி!" என்று குதித்தாள் கலா.

"பிக்னிக்கா? புளியோதரை, தயிர்சாதம் எல்லாம் தயார் செய்து விடட்டுமா?" என்றாள் வாணி.

"எதற்கு? நாம்தான் உயர்தர ஹோட்டலில் விருந்து சாப்பிடப் போகிறோமே!" என்றான் தாமோதரன்.

கலா உறங்கியதும் வாணி கேட்டாள் "என்ன, பணம் கைக்கு வந்ததா?"

"வந்தது. ஆனால் உடனே கை மாறி விட்டது".

"என் கைக்கல்லவா மாறி இருக்க வேண்டும்?"

"ஆமாம். ஆனால் உன் தங்கைக்குப் போய் விட்டது".

"என்ன சொல்கிறீர்கள்?"

"இன்று என் அலுவலகத்துக்கு சரவணன் வந்திருந்தார்".

"யார்? சாந்தி வீட்டுக்காரரா?"

"உன் தங்கை சாந்தியின் கணவர் சரவணன்தான். பின்னே சிவபெருமானின் பிள்ளை சரவணனா என்னிடம் வந்து கடன் கேட்கப் போகிறார்?"

"கடன் கேட்டாரா?"

"அவர்கள் பையனுக்கும் பள்ளிக் கட்டணம் கட்ட வேண்டி இருக்கிறதே! அவனுடைய பள்ளியில் இன்றுதான் கடைசி நாளாம்.

கலாவுக்குப் பணம் கட்டத்தான் இன்னும் ஒரு வாரம் அவகாசம் இருக்கிறதே?"

"உடனே கடன் வாங்கிய பணத்தை நீங்கள் அவரிடம் தூக்கிக் கொடுத்து விட்டீர்களாக்கும்?"

"தூக்கிக் கொடுக்கிற அளவுக்கு அவ்வளவு ஒன்றும் கனமான தொகை இல்லையே அது!"

கலா மௌனமாக இருந்தாள்.

"தன் கைக்கு வர வேண்டிய பணம் தங்கைக்குப் போய் விட்டதே என்று யோசிக்கிறாயா?"

"இல்லை. இதையே நீங்கள் உங்கள் தங்கைக்குக் கொடுத்திருந்தால் என்னால் இதை இவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொண்டிருக்க முடியுமா? என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்!"

தாமோதரன் வியப்புடன் வாணியைப் பார்த்தான்.

வாணி இலேசாகச் சிரித்து விட்டு, "சரி கலாவுக்குப் பணம் கட்ட என்ன ஏற்பாடு செய்யப் போகிறீர்கள்?" என்றாள்.

"அதுதான் நீயே சொல்லி விட்டாயே! ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டியதுதான்!"

ஞாயிறன்று மகாவலிபுரத்தில் கலா மிகவும் உற்சாகமாக இருந்தாள். "கண்ணனின் வெண்ணெய் உருண்டை" என்று அழைக்கப்படும் மெல்லிய அடித்தளத்தின் மீது பல நூறு ஆண்டுகளாக நின்று கொண்டிருக்கும் பெரிய பாறையைப் பார்த்து வியந்தாள்.

"எப்படி அப்பா! ஏதோ ஒட்ட வைத்த மாதிரி இவ்வளவு சிறிய அடித்தளத்தின் மீது எப்படி இந்த கனமான பாறை நிற்கிறது? அதிசயமாக இருக்கிறதே!"

"இது என்ன அதிசயம்? ஒல்லிப் பிச்சானாக இருக்கும் உன் அப்பா எவ்வளவு கனமான பாறையையும் தன் சுண்டு விரலில் தாங்குவார்!" என்றாள் வாணி.

"அதற்குக் காரணம் இந்த ஒல்லிப்பிச்சானை ஒரு குண்டுப் பிச்சான் தாங்கிக் கொண்டிருப்பதுதான்!" என்றான் தாமோதரன்.

"என்னையா குண்டுப்பிச்சான் என்கிறீர்கள்? அந்தப் பாறையைத் தூக்கி உங்கள் மேல் போட்டு விடுவேன்!" என்றாள் வாணி.

ஆனால் தாமோதரன் மேல் வந்து விழுந்தது அவள் வீசிய சிறு கூழாங்கல்தான்!

குறள் 45:


அன்பும் அறனும் உடைத்
தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

பொருள்:

இல்வாழ்க்கை அன்பு நிறைந்ததாகவும் அறத்தின் வழியில் செல்வதாகவும் இருக்குமானால், அதுதான் அதன் பண்பு. இல்வாழ்க்கையின் பயனும் அது தான்.

## விடுகதைகளும் விடைகளும்

- இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?
  தேள்
- பிடுங்கலாம் நடமுடியாது அது என்ன?
  தலைமுடி
- உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்? அவன் யார்?
  வெங்காயம்
- கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான். அவன் யார்?
  கரும்பு
- மரத்தின் மேலே தொங்குவது மலைப் பாம்பல்ல அது என்ன?
  விழுது
- இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது- அது என்ன?
  பட்டாசு
- ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, சீரங்கம் தூங்க திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?
  மூச்சு
- கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகி வருவான். அவன் யார்?
  பூரி
- கறுப்பு நிறமுடையவன், கபடம் அதிகம் கொண்டவன், கூவி அழைத்தால் வந்திடுவான், கூட்டம் சேர்த்தும் வந்திடுவான். அவன் யார்?
  காகம்
- பச்சை பெட்டிக்குள் வெள்ளை முத்துகள் ?
  வெண்டைக்காய்



வி.மாதுமை, மாணவி,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் கடந்த காலம் சென்று விட்டது. வருங்காலம் சந்தேகம் நிறைந்தது.எனவே, இருக்கும் காலத்திலேயே செயலாற்றிக் கொள்ளுங்கள்.
– ஹஸ்ரத் அலி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காலத்தைக் கைவிட்டதால் எல்லாவற்றையும் இழக்கலாயிற்று

அமெரிக்காவைப் பார்த்து நெருப்போடு விளையாடாதே என்றார் ஈராக் நாட்டின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன்.

அமெரிக்காவை அதட்டிய அந்தக் கணத்தில் சதாம் வீரனாகத் தெரிந்தார்.

ஆனால் அமெரிக்கா சதாமை தன் வலையில் வீழ்த்துவது எப்படி என்றே சிந்தித்தது.

அதன் விளைவு ஈராக் நாட்டில் வைத்து சதாம் ஹுசைன் தூக்கிலிடப்பட்டார்.

ஆக, வீரம் என்பது வீர வசனம் பேசுவதன்று. மாறாக தன்னையும் தன் நாட்டையும் தன் மக்களையும் காப்பாற்றும் வகையில் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப நடந்து கொள்வதே வீரமாகும்.

அதாவது அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டும். அஞ்சத் தேவையில்லாததற்கு அஞ்சுதல் ஆகா.

இதனையே வள்ளுவப் பெருந்தகை
அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்
என்றார்.

எல்லா இடத்திலும் வீராப்பு எடுபடாது. பணிய வேண்டிய இடத்தில் பணிதல்; விட்டுக் கொடுக்க வேண்டிய இடத்தில் விட்டுக் கொடுத்தல்; இறுக்க வேண்டிய நேரத்தில் இறுக்குதல் என்பன அரசியல் செய்வோரின் கடன்.

எனினும் இவை ஒழுங்கற்றுப் போகின்ற போது எல்லாமும் சீர்குலைந்து விடுகிறது.

இதுதவிர, எதையும் அந்தந்த நேரத்தில் செய்து முடிப்பதும் அரசியலில் மிகவும் அவசியம்.

காலம் கடந்தால் அதன் விளைவுகள் எவ்வாறாக இருக்கும் என்பதற்கு ஈழத் தமிழர்களாகிய நாமே இந்த உலகத்துக்குச் சிறந்த உதாரணம்.

ஆம், போரின் போது எம் தமிழினத்துக்கு ஏற்பட்ட அழிவை எங்களின் பலமாக்கி, சர்வதேசத்தின் ஆதரவை எமதாக்கி இருந்தால், இன்று தமிழினம் தலைநிமிர்ந்து நின்றிருக்கும்.

என்ன செய்வது ஓர் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஆசைப்பட்டு அரசுடன் இணைந்து சென்று புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம் என மார்தட்டியது இன்று என்ன வாயிற்று என்று நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இல்லை.

இதுபோல ஐ.நா மனித உரிமைகள் பேரவை விதித்த நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் உடனடியாகச் செய்தாக வேண்டும். கால அவகாசம் வழங்கக்கூடாது என்று கூறியிருந்தால், இன்று நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும்.

இப்போது எல்லாம் இழந்த நிலையில் அண்டை நாடான இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்றால்,

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாதெனத் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார்.

அதிலும் இந்தியப் பிரதமர் மோடியைச் சந்தித்த பின்னர் – 13ஐ அமுல்படுத்துங்கள் எனப் பிரதமர் மோடி கேட்டுக் கொண்டதன் பின்னர்; இலங்கை ஜனாதிபதி கோட்டாபய மேற்கண்டவாறு கூறினார் எனில், இந்தியாவும் இனி எதுவும் செய்ய முடியாது என்ற நிலை வந்துவிட்டதா என்ற ஐயம் எழுவதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

# ஜனாதிபதி இந்தியா சென்றது இராஜதந்திர ரீதியில் வெற்றி

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு விஜயத்தின் ஊடாக இராஜதந்திர ரீதியில் பாரிய வெற்றியை நாட்டுக்கு பெற்றுக் கொடுத்துள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை வரவேற்பதற்காக சென்ற அமைச்சர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சாதாரண பயணிகள் செல்லும் வழியின் ஊடாகவே தமது பயணத்தை மேற்கொண்டதுடன், மீண்டும் அதே வழியிலேயே திரும்பி வந்தார். இதன்போது விமான நிலையத்தின் செயற்பாடுகளை அவதானித்ததுடன், புதிதாகப் பொருத்தப்பட்டுள்ள ஸ்கான் இயந்திரத்தையும் பார்வையிட்டார்.

இதன் விளைவாக எதிர்வரும் நாட்களில், விமான பயணிகளுக்கு சிரமங்களின்றி பயணங்களை மேற்கொள்வதற்கான அனைத்து மறுசீரமைப்புகளும் துரிதமாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(ம-3)

# சுவிஸ் தூதுவரின் குற்றச்சாட்டில் எவ்விதமான உண்மையும் இல்லை

## முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்களின் விசாரணையில் சுவிட்சர்லாந்து தூதுவர் தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் கூறுகையில், "சுவிட்சர்லாந்து தூதரகத்தில் வீசா பிரிவில் பணிபுரிந்துவந்த பெண்ணை இனந்தெரியாத சிலர் வெள்ளை நிற வாகனத்தில் ஏற்றி அவரை இரண்டு மணித்தியாலங்கள் வரை விசாரித்ததாகவும் அவரின் கையடக்கத் தொலைபேசியை பரிசோதித்துள்ளதாகவும் விசாரணையின்போது குறித்த பெண்ணை அச்சுறுத்தியுள்ளதாகவும் சுவிட்சர்லாந்து தூதுவர் குற்றம் சாட்டியிருந்தார்.

தூதுவரின் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு, சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெண்ணால் முறைப்பாடு எதுவும் இதுவரை வழங்கவில்லை.

இவ்வாறான நிலையில் தூதுவரின் குற்றச்சாட்டு தொடர்பாக வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன ஆகியோர் இணைந்தே இந்த விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த அறிக்கையிலே சுவிட்சர்லாந்து தூதுவர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யென உறுதியாகியுள்ளது" என அவர் கூறினார்.(ம-3)

# ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த இருவர்

## கைதாகி பிணையில் விடுதலை

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிசாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் தவசிகுளம் பகுதியில் 30 மில்லி கிராம் வீதம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை கொடிகாமம் பொலிஸாரால் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டனர். இருவரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்காலை 9.00 மணிக்கும் மதியம் 12.00 மணிக்கும் நீதிமன்றத்தில் கையொப்பம் இடுவதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.(ம-3,114)

# தாமோதரம்பிள்ளையின் 120 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த சபையினால் எதிர்வரும் தை மாதம் முதலாம் திகதி நடத்தப்படவுள்ள சி.வை. தாமோதரம்பிள்ளையின் 120 ஆவது ஆண்டு விழாவில் யா/ ஏழாலை மகா வித்தியாசாலை முன்றலில் சிலை திறப்பு விழா இடம்பெறவுள்ளதோடு செந்தமிழ் பணி (பாகம் 2) மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளது.

எனவே விழாவின் சிறப்பிற்கு தங்களின் ஆலோசனைகள் மற்றும் விபரங்களை எதிர்வரும் 07 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக அறியத் தருமாறு சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த சபையின் செயலாளர் த.திருஞானசம்பந்தர் கேட்டுக் கொண்டுள்ளார்.

(ம-3)

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்**

16
2019

யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
இளைஞனே இதயத்தில் இன்றே மாற்றம் கொள். இழைக்கப்படும் இன்னல்கள் இன்றுடன் முடியட்டும். நாளைய நல்வாழ்விற்காய் இணைந்தே செயற்படுவோம்.

JSAC

# வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

உன்னை அளவின்றிப் புகழ்கிறவன் ஏற்கனவே உன்னை ஏமாற்றிவிட்டான் அல்லது ஏமாற்ற விரும்புகிறான்.
-ஹங்கேரி பழமொழி

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## வாழ்க்கை எனும் பெருங்கடலைக் கடக்க



சிறிது நேரமே ஆனாலும்கூட தூயவர்களுடன் கொள்ளும் தொடர்பு வாழ்க்கைப் பெருங்கடலைக் கடக்க உதவுகிறது. தொடர்பின் ஆற்றல் இத்தகையது.

"ஓம்" என்பதை மீண்டும் மீண்டும் உச்சரிப்பதும் அதன் பொருளைச் சிந்திப்பதும் உங்கள் மனத்துடனேயே நீங்கள் ஏற்படுத்திக் கொள்ளும் சிறந்த தொடர்பாகும்.

கற்றுக்கொள்ளுங்கள், கற்றதைச் சிந்தியுங்கள். இவ்வாறு நீங்கள் ஒளி பெறுவீர்கள். ஆன்மா வெளிப்பட்டுத் தோன்றும். "ஓம்" என்பதைச் சிந்திக்க வேண்டும். அதனுடன் அதன் பொருளையும் சிந்தியுங்கள். தீயவர்களின் தொடர்பை விலக்குங்கள். ஏனென்றால் பழைய தழும்புகள் போல் தீய சம்ஸ்காரங்கள் ஏற்கனவே உங்களிடம் இருக்கின்றன. அவற்றை வெளிப்படுத்துவதற்கான தூண்டுதலே தீயவர் தொடர்பு.

அதேபோல் நல்லோர் தொடர்பும் நம்மிடம் உள்ள நல்ல சம்ஸ்காரங்களை வெளிப்படுத்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நல்லோர் தொடர்பைப் போல் புனிதமானது இந்த உலகில் வேறொன்றும் இல்லை. அது நல்ல சம்ஸ்காரங்களை மேலே கொண்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளுக்கான தேசியமட்ட விளையாட்டு நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு 30 பதக்கங்கள்






மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி கொழும்பு சுகததாச சர்வ தேச விளையாட்டு அரங்கில் கடந்த 23, 24 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் கைதடி நவீல்ட் பாடசாலை சார்பில் 36 மாணவர்கள் பங்கு பற்றி 30 மாணவர்கள் 10 தங்கப் பதக்கங்களும் 15 வெள்ளிப்பதக்கங்களும் 5 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

18 வயது பிரிவின் கீழ் பிரிவில் ஈ.றிவால்டோ 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் முதலாம் இடம், 22 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் நீளம் பாய்தல், குண்டு போடுதல் போட்டிகளில் ரி.ரகுராம் முதலாம் இடம்,18 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் ஏ.எப்சிபா குண்டு எறிதலில் முதலாம் இடம், 22 வயது பெண்கள் பிரிவில் கே.யதுசா ஈட்டி எறிதலில் முதலாம் இடம், 18 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் 4X100 அஞ்சல் போட்டியில் எஸ்.மதிவதனன், எஸ்.பிந்துஜன், ஈ.றிவால்டோ, ஐ.அனுசன் ஆகியோர் முதலாம் இடத்தைப் பெற்று 10 தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளனர்.

16 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் எஸ்.ஜெபதீபன் இரண்டாம் இடம்.

18 வயது பெண்கள் பிரிவில் நீளம் பாய்தலில் எஸ்.லக்சனா இரண்டாம் இடம், 18 வயது ஆண்கள் பிரிவில் குண்டு போடுதலில் பி.காருஜன் இரண்டாம் இடம், 22 வயது பெண்கள் பிரிவில் குண்டு போடுதலில் கே.யதுசா இரண்டாம் இடம்.

20 வயது பெண்கள் பிரிவில் 200 மீற்றர் ஓட்டப் போட்டி நீளம் பாய்தலில் எஸ்.சுஜிதா இரண்டாம் இடம், 18 வயது ஆண்கள் பிரிவில் ஈட்டி எறிதலில் ஜே.யோகேஸ்வரன் இரண்டாம் இடம், 18 வயது பெண்கள் பிரிவில் 4X100 அஞ்சல் போட்டியில் வி.ஜோதிகா, எஸ்.லக்சனா, ஏ.தயானா,கே.ஜெனுசா ஆகியோர் இரண்டாம் இடம்,20 வயது பெண்கள் பிரிவில் அஞ்சல் போட்டியில் எஸ்.ஜானுகா, எஸ்.சுஜிதா, ஏ.இப்சிகா,ஐ.மதுரா ஆகியோர் இரண்டாம் இடத்தைப் பெற்று 15 வெள்ளிப் பதக்கக் களையும் 18 வயது ஆண்கள் பிரிவில் நீளம் பாய்தலில் இ.றிவல்டோ மூன்றாம் இடம், 16 வயது ஆண்கள் பிரிவில் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் எஸ்.ஜெபதீபன் மூன்றாம் இடம், 14 வயது பெண்கள் பிரிவில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மேரியூலினா மூன்றாம் இடம், 12 வயது பெண்கள் பிரிவில் நீளம் பாய்தலில் எஸ்.ஆர்த்தி மூன்றாம் இடம், 20 வயது பெண்கள் பிரிவில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் எஸ்.சுஜிதா மூன்றாம் இடம் பெற்று 5 வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர். (க-114)

# பான் ஏசியா வெற்றிக்கிண்ணம் உருத்திரபுரம் அணி சம்பியன்






2019ஆம் ஆண்டுக்கான பான் ஏசியா கிண்ணம் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் தன்வசமாக்கியது. பான் ஏசியா வங்கியினால் வடமாகாண கழகங்களிற்கிடையிலான உதைபந்தாட்ட போட்டித் தொடர் அண்மையில் நடைபெற்றது. முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த விளையாட்டுப் போட்டியின் முதல் கிண்ணத்தினை உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் தன் வசமாக்கியது. இறுதி போட்டி கிளிநொச்சி மருதநகரில் அமைந்துள்ள உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் மற்றும் வலைப்பாடு ஜெகமீட்பர் அணிகள் மோதிக் கொண்டன. இதன்போது 3.0 எனும் கோல்கணக்கில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் கிண்ணத்தை தன்வசமாக்கிக் கொண்டது. இறுதிப்போட்டி நிகழ்வில் பான் ஏசியா வங்கியின் உயர் பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ரவிப்பிரிய உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்தனர். (க-100)

# என்னைவிட பும்ரா சிறப்பாக வீசுகிறார் ஜோக்கர் மன்னன் மலிங்க புகழாரம்




இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் மலிங்க, இந்தியப் பந்து வீச்சாளர் பும்ராவின் பந்து வீச்சை பார்த்து மிரண்டு போயுள்ளதாக கூறியுள்ளார்.

உலகக்கிரிக்கெட் போட்டியில் தன்னுடைய யோர்க்கர் மூலம் பட்ஸ்மேன்களை மிரட்டி வருப வர் இலங்கை வீரர் மலிங்க, இருபது-20 போட்டிகளில் குறிப்பாக கடைசி கட்ட ஓவர்களில் சிறப்பான பந்து வீச்சாளர் என்ற பெயர் பெற்றவர்.

இவர் சமீபத்திய பேட்டி ஒன்றில் நானே இந்திய பந்து வீச்சாளர் பும்ராவின் திறமையை கண்டு பிரமிப்பதாக கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், கடந்த 2013ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடருக்கான மும்பை அணியின் பும்ரா இடம் பெற்றார். நானும் மும்பை அணிக்காக ஆடி வருகிறேன்.

அப்போதிலிருந்து அவரது தனித்துவமான பந்து வீச்சை பார்த்த நான் அவருக்கு எனது ஆலோசனைகளை வழங்கினேன்.

தற்போது உலகின் நம்பர்-1 ஆக வளர்ந்து நிற்கும் பும்ராவையும் அவரது இந்த வளர்ச்சியை பார்க்க பிரமிப்பாக இருக்கிறது. அதேபோன்று அவரது கிரிக்கெட் வாழ்வில் நான் ஆலோசனை வழங்கியுள்ளது மிக மகிழ்ச்சியான விடயம். ஒரு இளம் வீரருக்கு என்னால் முடிந்தவற்றை நான் பகிர்ந்துள்ளேன்.

என்னைக் காட்டிலும் அவர் பந்து வீச்சில் அதிக திறன்களை வைத்துள்ளார். அனைத்தையும் கற்றுக்கொள்ளும் ஆர்வத்தில் இருக்கிறார். அற்புதமாக யோர்க்கர் வீசுகிறார்.

அதிலும் குறிப்பாக மெதுவாக யோர்க்கர் பந்துகளை வீசுகிறார். அது எப்படி முடிகிறது? என்று என்னால் தெரியவில்லை. அந்த அளவுக்கு அவர் விக்கெட் வீழ்த்தும் வேட்கையில் இருக்கிறார் என்று கூறி முடித்தார். (க)

# என் மனைவியை ஏன் இழுக்கிறீர்கள்? கோபத்தின் உச்சத்திற்குச் சென்ற கோலி

தேர்வாளர்களை குறை சொல்ல வேண்டுமென்றால் நேரிடையாக பேசவேண்டுமென்றும் அதற்காக தன்னுடைய மனைவி அனுஷ்காவின் பெயரை எதற்காக பயன்படுத்த வேண்டும் என்றும் விராட் கோலி கேள்வியெழுப்பியுள்ளார்.

உலகக்கோப்பை போட்டியில் வீரர்கள் குறித்து கவலை கொள்ளாமல் எம்.எஸ்.கே.பிரசாத் தலைமையிலான தேர்வாளர்கள் நடிகையும் விராட் கோலியின் மனைவியுமான அனுஷ்கா ஷர்மாவுக்கு டீ



கொடுத்து உபசரித்துக் கொண்டிருந்ததாக முன்னாள் விக்கெட் கீப்பர் பரோக் இன்ஜினியர் குற்றம் சாட்டியிருந்தார்.

எம்.எஸ்.கே.பிரசாத் மற்றும் [illegible] இந்த விமர்சனம் செய்யப்பட்டு ஒரு மாதம் கடந்த நிலையில், தற்போது இந்த பேச்சு குறித்து கோலி தன்னுடைய மௌனத்தை கலைத்துள்ளார். தேர்வாளர்கள் குறித்து குறை சொல்ல வேண்டுமென்றால் நேரிடையாக பேச வேண்டும். அதை விடுத்து பிரபலமான நடிகையாக உள்ள தன்னுடைய மனைவியின் பெயரை அதில் ஏன் நுழைக்க வேண்டும் என்று கோலி கேள்வி எழுப்பியுள்ளார்.

அனுஷ்கா போன்ற பிரபலமான நடிகையின் பெயரை பயன்படுத்தினால், அந்த விடயம் எளிதாக மற்றவர்களை சென்று சேர்ந்துவிடும் என்பதற்காக அவரது பெயரை முன்னாள் விக்கெட் கீப்பர் பயன்படுத்தியுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் எந்த இடத்திற்கு சென்றாலும் விதிமுறைகளை கடைப்பிடிப்பவர் அனுஷ்கா என்று விராட் கோலி தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனா, கனடா, பாகிஸ்தான்...

குறித்த சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஜனாதிபதி, உயர்ஸ்தானிகருடன் சுமூகமாக கலந்துரையாடியதுடன், உயர்ஸ்தானிகர் கனடா அரசாங்கத்தின் சார்பில் தனது வாழ்த்துக்களை ஜனாதிபதி கோட்டாபயவுக்கு தெரிவித்தார்.

இதேவேளை சீன மக்கள் குடியரசின் அரச பேரவையின் விசேட பிரதிநிதியும் சீன வெளிவிவகார அமைச்சின் ஆசிய பிராந்தியத்திற்கான பணிப்பாளர் நாயகமுமான இலங்கைக்கான முன்னாள் சீன தூதுவர் வூ ஜியாங்கோவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தார்.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி நேற்று பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு நடந்தது. இதன்போது, ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டியதற்கு கோட்டாபயவிற்கு பாகிஸ்தான் அரசு சார்பில், மஹ்மூத் குரேஷி வாழ்த்து தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி, வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த பாகிஸ்தானின் ஆர்வத்தை தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்பையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் பாகிஸ்தான் நம்புகிறது என்று வெளியுறவு அமைச்சர் கூறினார். நாட்டின் பௌத்த பாரம்பரியத்தை அபிவிருத்தி செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கையுடன் இணைந்து பணியாற்ற தனது அரசாங்கம் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பாகிஸ்தானிற்கு வருமாறு அழைப்பும் விடுத்தார். பரஸ்பர நன்மை அடிப்படையில் வர்த்தக மற்றும் முதலீட்டுத் துறையில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உறுதி செய்ய வேண்டுமென கோட்டாபய குறிப்பிட்டார்.

இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் இலங்கையை ஆதரிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி பாகிஸ்தான் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். (ம-3)

## தாக்குதல் நடத்தப்படுமென...

தின தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நேற்று பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

விசாரணை ஆணைக்குழுவின் செயற்பணிகள் மற்றும் ஒழுங்கமைப்பினை தெளிவுபடுத்திய ஆணைக்குழுவின் தலைவர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஜானக்க டி சில்வா இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தினார்.

தாக்குதல் ஒன்று நடாத்தப்படுமென முன்கூட்டியே கிடைக்கப்பெற்ற தகவல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொள்ளவில்லை என ஆணைக்குழுவின் தலைவர் இதன்போது தெரிவித் தார்.

இதனை மறைப்பதற்காக சில அதிகாரிகள் பொய்யான ஆவணங்களை தயாரித்துள்ளதாக சந்தேகம் ஏற்படுவதாகவும் நீதியரசர் தெரிவித்தார். (ம-3)

## இரண்டு வாரத்...

கத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின் போதே புதிய கட்சியை ஆரம்பிப்பது குறித்து அறிவிப்பை வெளியிட்டுள்ளார். மேலும் தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ அமைப்பு தமிழரசுக் கட்சியின் எடுபிடியாக ஒட்டிக் கொண்டு செயற்பட்டுவருவ தாகவும் அவர் கூறியுள்ளார்.

எனவே மீண்டும் ரெலோவுடன் இணைந்து கொள்வது என்பது சாந்தியமில்லை என்றார். (ம-3)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.:3269 திகதி: 2019.12.02
நீலம் திங்கட்கிழமை
சுப்பிரி தஹஸ் விசேட இலக்கம் 1989
வெற்றி இலக்கங்கள் 07 30 51 70
ஆங்கில எழுத்து H
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 30,669,285/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சீட்டிழுப்பு இல: 809
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.12.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,643,795/-
அத கோடிபதி ADA KOTIPATHI
வெற்றி இலக்கங்கள் 07 20 63 74
ஆங்கில எழுத்து P
தொலைபேசி: 0112 333 546-47, 0114 825 825

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1085
சீட்டிழுப்பு திகதி 02.12.2019 ஊதா
W 31 35 64 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84,969,800
தொ.பே: 0112 333 545/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02/12/2019 வெற்றி வாரம் 2695 வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் கன்னி 18 19 32 57
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,487,214
2019/12/03ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


## 19ஆவது திருத்...

வேற்றப்பட்டபோது பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றது.

திருத்தம் செய்ய வேண்டிய சில உட்பிரிவுகள் இருப்பதாக தற்போதைய அரசு உணர்ந்தால், திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கத்துடன் கலந்துரையாட ஐக்கிய தேசிய கட்சி தயாராகவே உள்ளது என்று அவர் கூறினார்.

எனினும், 19 ஆவது திருத்தத்தை முற்றிலுமாக ஒழிப்பதற்கு ஐக்கிய தேசியபக் கட்சி ஆதரவளிப்பது சாத்தியமில்லை என்று அவர் மேலும் கூறினார்.

அண்மையில் ஹிந்து பத்திரிகைக்கு பேட்டியளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாராளுமன்றில் தனக்கு பெரும்பான்மை கிடைத்தால் 19 ஆவது திருத்த சட்டத்தை ரத்துச் செய்வேன் என தெரிவித்திருந்தார். (ம-3)

## எதிர்க்கட்சித் தலை...

இரண்டு கூட்டங்களில் சஜித் பங்கேற்காததே, ரணிலின் இந்த முடிவிற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்பதானால், தற்போதைய சபாநாயகர் பொறுப்பை அவர் விட்டு விலக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இளம் குடும்பஸ்...

யாழ் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த நபர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## சம்பவ இடத்தி...

டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள் ஏ9 வீதியில் நின்ற மாட்டுடன் மோதியுள்ளனர்.

இதன்போது தூக்கி வீசப்பட்ட இரு இளைஞர்களும் எதிரில் வந்த பேருந்துடன் மோதியுள்ளனர்.

இவ் விபத்தில் வத்தளையை சேர்ந்த 21வயதுடைய கிருபாகரன் துஸ்யந்தன் பலியானதுடன் அவருடன் பயணித்த ரஞ்சித்குமார் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இளைஞர்களின் மோட்டார் சைக்கிளில் மோதுண்ட மாடும் பலியாகியுள்ளது. (ம-3,299)

## பாராளுமன்றத்தை முடக்கி...

பாராளுமன்ற அமர்வை ஒத்திவைக்கும் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இன்று இடம்பெறவிருந்த பாராளுமன்ற அமர்வு ஜனாதிபதியின் கட்டளைக்கு அமைய இடம்பெறாது.

ஜனாதிபதியின் கட்டளைக்கமைய அடுத்த பாராளுமன்ற அமர்வு 2020 ஜனவரி மாதம் 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்ற அமர்வு ஆரம்ப உரையை நிகழ்த்துவார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றை ஒத்திவைக்கும் கட்டளையை வழங்கியுள்ள நிலையில் பாராளுமன்றின் கோப் குழு உள்ளிட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக்கள் கலைக்கப்படுவதுடன் ஆயிரக் கணக்கான பிரேரணைகள் மற்றும் பொது மக்களின் மனுக்கள் என்பன நிகழ்ச்சி நிரலிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னான முதலாவது பாராளுமன்ற அமர்வு இன்று இடம்பெறவிருந்தது.

இந்த நிலையில் அரசியலமைப்பின் 70 ஆவது பிரிவில், ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் அனைத்தும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கட்டளைக்கு அமைவாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, பாராளுமன்றம் முடக்கப்பட்டுள்ள காலப்பகுதியில், எந்த பிரேரணைகளையும் முன்வைக்கவோ, கேள்விகளை முன்வைக்கவோ முடியாது. கிட்டத்தட்ட நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டிருக்கும்.

அத்துடன், ஏற்கனவே பதவியிலிருக்கும் கோப் குழு உள்ளிட்ட தெரிவுக் குழுக்கள் கலைக்கப்படுவதுடன், ஆயிரக் கணக்கான பிரேரணைகள் மற்றும் பொது மக்களின் மனுக்கள் என்பன நிகழ்ச்சி நிரலிலிருந்து அகற்றப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வெள்ளை வானில் கடத்தப்...

வெள்ளை வான் சாரதி மற்றும் கடத்தப்பட்டவர் என குறிப்பிடப்பட்ட இருவரே அதில் தகவல்களை வெளியிட்டனர். அந்தோனி டக்ளஸ் பெர்னாண்டோ மற்றும் அத்துல சஞ்சய மதனாயக ஆகிய இருவரே தகவல்களை வெளியிட்டனர்.

இந்த குற்றச்சாட்டின் உண்மைத் தன்மை குறித்த விசாரணை தொடங்கியுள்ளதாக சி.ஐ.டியினர் தலைமை நீதவானிடம் தெரிவித்திருந்தனர்.

அதன்படி, பத்திரிகையாளர் சந்திப்பின் திருத்தப்படாத வீடியோ பதிவை ஒப்படைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

விசாரணையின் முன்னேற்றம் குறித்து நாளை நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டது. (ம-3)

## யாழ்.இளைஞர்கள் இருவர்...

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர்கள் ஈரானிய எல்லைகளின் ஊடாக ஐரோப்பிய நாடான அல்பேனியாவிற்கு செல்ல முயற்சித்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். ஓமானின் மஸ்கட் நகரிலிருந்து ஈரானின் டெஹ்ரான் நகரிற்கு செல்வதற்காக இரண்டு விமான பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்ய முயன்ற போதே இவர்கள் வசமாக சிக்கியுள்ளனர்.

சந்தேகநபர்களை குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## யாழ்.நகரில் கஞ்சாவுடன்...

கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருளை ஒழிக்கும் நோக்கத்துடன் கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகம் இணைந்து யாழ்ப்பாண நகரில் கூட்டு நடவடிக்கையை தொடங்கின.

அங்கு மேற்கொண்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிளை சோதனை செய்த போது, இந்த கேரள கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது.

குறித்த சந்தேக நபர் 34 வயதான மட்டக்களப்பு, ஆரையம்பதி பகுதியில் வசிக்கின்ற போதைப் பொருள் கடத்தல்காரர் என கண்டறியப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர், மோட்டார் சைக்கிள் மற்றும் கேரளகஞ்சா பொதி மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. (ம-3)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 02-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2318
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 38 47 48 74

மஹஜன சம்பத
திகதி 2019/12/02
சீட்டிழுப்பு இலக்கம் 4061
ஆங்கில எழுத்து H வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 4 0 0 5 9

மெகா பவர்
திகதி 2019/12/02
சீட்டிழுப்பு இலக்கம் 466
வெற்றி எழுத்து H சுப்பர் இலக்க 08 வெற்றி இலக்கங்கள் 02 18 21 80

சுபிரி வாசனா
திகதி 02/12/2019
சீட்டிழுப்பு இலக்கம் 1483
இலக்கம் 13 வெற்றி இலக்கம் 22 43 62 63 02 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KBK CENTRE**
கந்தர்மடம். | கொழும்புத்துறை
**Mr. K. BALAKAJEN**
B.COM(Jaf), H.N.Dip-in.Acc (ATI), Dip-in.Edu (Ousl) M.com (Hons) Acc.Spl
தரம் 10, O/L 2020
வணிகக்கல்வியும் கணக்கீடும்
(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்)
ஆரம்பம்:- 06.12.2019 வெள்ளி 6 மணி
**கணக்கீடு**
A/L 2020, A/L 2021 புதிய பிரிவுகள்
ஆரம்பம்:- 07.12.2019 சனி 2 மணி (1318)
0750775660, 0765655956



**வேலைவாய்ப்பு**
யாழில் இயங்கும் தனியார் உயர்கல்வி நிறுவனத்துக்கு வரவேற்பாளர், நிர்வாக உதவியாளர் தேவை. (1353)
077 968 4225



**வேலைக்கு ஆள் தேவை**
தோட்ட வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. (நாட் கூலி) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
இடம்: நெல்லியடி அருகாமை
தொடர்பு:- (C-8411)
076 714 8059


# தேர்தலில் வெளிப்பட்ட ஈழநாடு வரைபடத்தை மூடி மறைக்க முடியாது

## ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் ஒன்றிணைந்து வாக்களித்ததை விஸ்தரிக்கும் இலங்கை விளக்கப்படத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஈழநாட்டு வரைபடத்திற்கும் தொடர்பிருப்பதாக இராஜாங்க அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சிங்களத் தலைவருக்கே தமிழ் மக்கள் வாக்களித்திருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியிருந்தாலும், அந்த சிங்களத் தலைவரது தேர்தல் விஞ்ஞானத்தில் சிங்கள பௌத்த மக்களின் மனங்களில் ஆழமாக இருந்த சந்தேகத்திற்கிடமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததே பிரதான பிரச்சினையாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

இராஜாங்க அமைசசர் ஹெகலிய ரம்புக்வெல அவரது பிரதேசமான கண்டியில் நேற்று திங்கட்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை வரைபடமாகப் பார்த்தால் ஈழநாட்டு வரை படமானது அதில் தெளிவாகத் தெரிகிறது என்பது மூடிமறைக்க முடியாத உண்மையாகும் என அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முடிவுகளில் ஒரு நேர் கோடு காணப்பட்டது. அந்தக் கோட்டினை மூடிமறைக்க முடியாது. ஈழநாட்டு வரைபடத்தை பார்த்தால் அது புரியும். அதனை மூடி மறைத்துப் பேசினால நாங்கள் பொய் கூறுவதாகி விடும் என அவர் தெரிவித்தார். (ம-3)


**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
(C-8115)
0768226240
V2 TRAVELS



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
**ராஜ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (1359)



**வேலைவாய்ப்பு**
இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரியவாய்ப்பு.
வட மாகாணத்தில் இயங்கிவரும் பிரபல நிறுவனத்தில் பணிபுரிய... ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- வயதெல்லை 18 - 35
- உணவு, தங்குமிட வசதிகள் உண்டு
- மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் பணிபுரியும் வாய்ப்பு

(1360)
மேலதிக தகவல்களுக்கு:- 0771571699, 0776354588



**INSTITUTE OF MEDICAL SCIENCES**
**Green Memorial Hospital Manipay**

கைத்தொழில் வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன்

**NVQ பாடநெறி தொடர்பாக பயிலுனர்களை இணைத்துக் கொள்ளல் ஆரம்பம்**
**இன்றே இணையுங்கள்**
**கற்கை நெறிகட்டணம் முற்றிலும் இலவசம்**
**பயிற்சி முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.**

| கற்கைநெறி | தேசிய தொழில் நிலை (NVQ Level) | காலம் | நுழைவுத் தகுதி |
|---|---|---|---|
| Care Giver (பராமரிப்பாளர்) | நிலை-3 | 3 - 7 மாதம் | தரம் 9 சித்தி |
| Dental Surgery Nursing Assistant (பல் அறுவை சிகிச்சை தாதிய உதவியாள்) | நிலை-3 | 3 - 7 மாதம் | தரம் 9 சித்தி |
| Bio Medical Technician (உயிர்மருத்துவ தொழில்நுட்பவல்லுநர்) | நிலை-3 | 3 - 7 மாதம் | தரம் 9 சித்தி |
| Geriatric Care Giver (முதியவர் பராமரிப்பாளர்) | நிலை-4 | 18 மாதம் (6 மாதம் பயிற்சி) | O/L சித்தி அல்லது தரம் 8 க்கு மேல் குறைந்தபட்சம் 1 வருட அனுபவம் |
| Child Care Centre Operator (குழந்தை பராமரிப்பு மைய செயற்பாடுகள்) | நிலை-4 | 18 மாதம் (6 மாதம் பயிற்சி) | O/L சித்தி அல்லது தரம் 8 க்கு மேல் குறைந்தபட்சம் 1 வருட அனுபவம் |

Green Memorial Hospital, Manipay. (C-8396)
Tel : 0778090982
021 225 6335 / 021 225 6990
email : theimsjaffna@gmail.com
Website : www.ims.lanka.lk



**வேலைவாய்ப்பு**
A/L முடித்த இளைஞர், யுவதிகள் உங்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்
நெல்லியடியில் பிரதான நிதி நிறுவனத்தில் எம்முடன் இணைந்து பணியாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
18 வயதுக்கு மேற்பட்டோர் விண்ணப்பிக்கலாம்.
Join with us

தொடர்புகளுக்கு:- (C-8413)
076 408 9435, 076 363 4697



EVERSHINE EDUCATION CENTRE
THINK GLOBALLY ACT LOCALLY
**புதிய கல்வியாண்டு - 2020**
**ICT 6,7,8,9 10,11**
S.Gowsigan (B.Tech - ICT)

| | | |
|---|---|---|
| தரம் - 11 (தமிழ் மொழி மூலம்) பிரிவு I 07.12.2019 3.00 pm - 4.00 pm | தரம் - 11 (தமிழ் மொழி மூலம்) பிரிவு II 04.12.2019 3.00 pm - 4.00 pm | தரம் - 11 (ஆங்கில மொழி மூலம்) பிரிவு I 06.12.2019 3.00 pm - 4.00 pm |
| தரம் - 10 (தமிழ் மொழி மூலம்) 06.12.2019 9.00 am - 10.00 am | தரம் - 10 (ஆங்கில மொழி மூலம்) 06.12.2019 8.00 am - 9.00 am | தரம் - 11 (ஆங்கில மொழி மூலம்) பிரிவு II 06.12.2019 5.15 pm - 6.15 pm |

- 6-9 வரையான தரங்களுக்கு வகுப்புக்கள் தனித்தனியாக இடம்பெறும்
- 6-9 வரையான தரங்களுக்குரிய நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
- நேர அட்டவணை, அனுமதிகளுக்கு 01.12.2019 முதல் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

குளிரூட்டப்பட்ட கணனி ஆய்வுகூடம், குளிரூட்டப்பட்ட வகுப்பறை (1350)
123 பிறவுண் வீதி யாழ்ப்பாணம் 0773784053



**Techno World**
தொழில்நுட்பப் பிரிவு
**A/L 2020 Day Class**
ஆரம்பம்
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, இலகு கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்

(C-8415)
06.12.2019 வெள்ளிக்கிழமை காலை 8.30
077 017 5346, 077 170 3549
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.



**சாவகச்சேரியில்...**
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை
லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=
சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576
**அருள்**
இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8397)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.